விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 352 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 20 புதன்கிழமை (06.12.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த 2020ஆம் ஆண்டு பெப்ரவரி மாதத்தின் பின் அதி கூடிய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை கடந்த மாதம் பதிவாகியுள்ளது.

சுற்றுலா மேம் 15

## அதிபர், ஆசிரியர் சம்பளப் பிரச்சினைக்கு தீர்வு பெற்றுத் தருமாறு வலியுறுத்தி

### பாராளுமன்ற வளாகம் முன் போராட்டம்



15


## கல்விக்கான ஒதுக்கீடு அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த வருடத்துடன் ஒப் பிடும்போது இந்த வருட வரவு செலவுத் திட்டத்தில் கல்விக் கான ஒதுக்கீட்டில் 55 பில்லி யன் ரூபாய் அதிகரிப்பு ஏற்பட் டுள்ளதாகவும், நெருக் கடியான பொருளா 15

### பிரபாகரன் நேர்மையான தலைவர்

# அவருக்கு நிகராக எவரும் இல்லை



## கமால் குணரத்ன அதிரடி

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் ஒரு நேர்மையான தலைவர். அவருக்கு நிகராகத் தமிழர் தரப்பில் இனி எவருமே வரமுடியாது என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கவுடன் இணைந்து பயணிப்பது தொடர்பில் முடிவு எடுக்கப்படவில்லை



### நாமல் ராஜபக்ஷ எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியு டன் இணைந்து பயணிப்பது குறித்து எவ்வித முடிவும் எடுக் கப்படவில்லை என பாராளு மன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள் ளார்.

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைக் குறிப்பிட் டுள்ளார்.

இவ்விடயம்தொடர் பாக அவர் மேலும் 15

## சா/த பரீட்சைப் பெறுபேறு குறைவால் முரண்பாடு

### அராலியில் விபரீத முடிவெடுத்த மாணவி உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

க.பொ.த சாதாரண தரப் பரீட்சை பெறுபேறு குறை வால் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக மாணவி ஒருவர் விபரீத முடிவெடுத்து உயிரி ழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று மதி யம் 11 மணியளவில் இடம்பெற்றுள்ளது. 15

## டிஜிட்டல் முறையில் பிறப்புச் சான்றிதழ்

(களுத்துறை)

நாட்டில் இனிவரும் காலங் களில் டிஜிட்டல் முறையில் பிறப்புச் சான்றிதழ்கள் வழங் கப்படவுள்ளன.

இலத்திரனியல் மக்கள் தொகை பதிவேடு வேலைத் திட்டத்தின் கீழ் தேசிய டிஜிட் டல் பிறப்புச் சான்றிதழ் வெளி யிடும் நிகழ்வு உள்நாட்டலு வல்கள் இராஜாங்க அமைச் சர் அசோக பிரியந்த தலைமை யில் நேற்று இடம்பெற்றது.

களுத்துறை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்த தேசிய டிஜிட் 15

## சிங்களம் மட்டும் என்ற கொள்கையுடன் முன்நோக்கி பயணிக்க முடியாது



### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

சிங்களம் மட்டும்தான் என்ற கொள்கையுடன் முன் நோக்கிப் பயணிக்க முடி யாது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேம தாஸ தெரிவித்துள் ளார்.

வரவுசெலவுத்திட்டம் மீதான குழுநிலை விவாதத்தின் போதே அவர் இவ்வாறு குறிப் பிட்டார்.

இவ்விடயம்தொடர் பாக அவர் மேலும் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து
# 600 மில்லியன் டொலர்கள் இலங்கை பெறவுள்ளது

(கொழும்பு)

ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் இருந்து 600 மில்லியன் டொலர்களை இலங்கை பெறவுள்ளதாக உயர் அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியம் நெருக்கடியால் பாதிக்கப்பட்ட நாட்டிற்கான 2.9 பில்லியன் டொலர் கடன் தவணையின் இரண்டாவது தவணையை வழங்கிய தன் பின், ஆசிய அபிவிருத்தி வங்கியில் இருந்து இலங்கைக்கு சுமார் 600 மில்லியன் டொலர்கள் கிடைக்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

2022 இல் வரலாறு காணாத அளவு இலங்கையின் பொருளாதாரம் 7.8% ஆக பாதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

---

நீங்கா நினைவுகளுடன்

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்

## முத்துச்சாமி முகுந்தரதன்

மலர்வு : 17.10.1978 உதிர்வு : 06.11.2023

**மணி ரதம் நகர மறுத்ததுவோ...**

எங்கள் குலக் கொழுந்தே
எம் சந்ததியின் சந்தன விருட்சமே
எம் பரம்பரையின் பரந்த வான் நிலவே
நீ எம்மை விட்டுச் சென்று
முப்பத்தொரு நாட்கள் ஓடி மறைந்ததடா
செல்வமே நீ எம்முடன் இல்லையா?
அதை மட்டும் மனம் ஏற்க மறுக்குதடா.
மாங்குளம் மண்ணில் மழலையாகி
வவுனியாவில் பிரபல இந்து நாகரிக ஆசான்.
இன உணர்வு எழும் குரல் வளத்தால்
தமிழ் நெஞ்சங்களைத் தட்டி எழுப்பியவனே
கோயில்கள் தோறும் சொற்பொழிவாளனாய்
நேர்முக வர்ணனைக்கு உனக்கு யார் இங்கே நிகர்.?
பாடசாலையிலே நல் ஆசானாகி
ஐடியல் கல்லூரியின் ஸ்தாபகனாய்.
மொட்டவிழ் புன்னகையால்
மனங்களைக் கட்டிப் போட்ட மணி ரதமே
உனைத் தூக்கிய கரங்கள்
துவண்டு துடிக்குதடா
நிஜத்துடன் கதை பேசி
நிழலோடு தொடர்வாய் என எண்ண
இப்போ நினைவாக மட்டும் மாறி
நிலைதடுமாற வைத்துவிட்டாய்
மீண்டும் எம் குலப் பூங்காவில் - நீ
புது மலராய் மலர்வாய்.

(18113)

**உன் ஆத்மா சாந்திக்காய் வேண்டுகின்றேன்.**
**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

மறக்க முடியா மனத்தவிப்புடன்

**திருமதி கௌரிபுத்திரி கிருபாகரன்** (சிறிய தாயார்)
ஆசிரியர் - கிளி/கிளிநொச்சி ம.வி.
077 967 4333

---

# 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் **சின்னத்தம்பி சிவஞானசுந்தரம் B.A**

திதி : 06.12.2023

தோற்றம்: 25.09.1928 மறைவு: 07.12.2012



ஆண்டு பல சென்றாலும் நான் அழுவது ஓயவில்லை. கனவிலும் நினைவிலும் அல்லாது கண்முன்னே நீயில்லை. கடமைகள் முடித்துவிட்டுக் கடவுளடி சேர்ந்து விட்டாய் என்று நீ சென்றாயோ அன்றே யாவும் பறிகொடுத்தேன். மங்கலம் இழந்தேன், மனை இழந்தேன், மதிப்பிழந்தேன், மகளையும் இழந்தேன். மகன் மட்டும் இல்லையென்றால் என்றோ மண்ணாகிப் போயிருப்பேன். வாழ்வில் நீ வென்றுவிட்டாய். நான் தோற்றுவிட்டேன் ஐயா!

மனைவி சி.வள்ளிநாயகி (18112)

---

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## பாலசிங்கம் இரவீந்திரன்

பிறப்பு : 06.09.1954 இறப்பு : 18.11.2022

ஆருயிர் அப்பா!
ஓராண்டு நகர்ந்தாலும்
உங்கள் நினைவுகள் எங்களை விட்டு என்றுமே அகலாது அப்பா!
எப்போதும் எம் சிந்தனைகளில் வலம் வந்து கொண்டு இருக்கிறீர்கள் அப்பா!
எத்தனை காலங்கள் கடந்தாலும் எங்கள்
வாழ்வின் ஒவ்வொரு நகர்வுகளிலும் நீங்கள்
வாழ்ந்து கொண்டே இருப்பீர்கள் அப்பா!

உங்களின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மயிலியாவளவு, கரணவாய்,
076 144 5534 (18104)

இங்ஙனம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனவரி மாதம் முதல்

## மீண்டும் அதிகரிக்கப்படும் மின்கட்டணம்

### இலங்கை மின்சார சபை ஊழியர் சங்கம் தெரிவிப்பு



(கொழும்பு)

**அடுத்த மாதம் முதல் மீண்டும் மின்கட்டணம் அதிகரிக்கப்படும் என இலங்கை மின்சார ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.**

எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் 18 வீதமாக அதிகரிக்கப்படவுள்ள வற் வரி எரிபொருள் விலை நிர்ணயத்தை நேரடியாகப் பாதிப்பதால் மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்படும் என சங்கத்தின் செயலாளர் ரஞ்சன் ஜயலால் சுட்டிக்காட்டியுள்ளார்.

மின்சார சபை மறுசீரமைப்பை எதிர்க்கும் தொழிற்சங்க தலைவர்களை ஒடுக்குவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்ய வந்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டில் மின்சார உற்பத்திக்கான டீசல் போதுமான அளவு ஒதுக்கப்படவில்லை என்று கூறிய அவர், இதுவரையிலும் நாட்டு மக்களுக்கு பலன்கள் வழங்கப்படவில்லை என்றும் குற்றம் சாட்டியுள்ளார். (நி-5-6)

## நாடு திரும்பினார் ஜனாதிபதி

(கொழும்பு)

துபாயில் நடைபெற்ற "காலநிலை மாற்றம் தொடர்பான மாநாட்டில்" பங்கேற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் இரவு நாடு திரும்பினார்.

இந்த மாநாட்டில், இலங்கைக்கும் மாலைதீவுக்கும் இடையிலான கூட்டுத் திட்டமாக ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள சர்வதேச காலநிலை மாற்றம் தொடர்பான பல்கலைக்கழகத்துக்கான திட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க முன்வைத்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## 17,095 மனித நாட்கள் போராட்டங்களால் இழப்பு

(கொழும்பு)

2022 ஆம் ஆண்டில் தொழில் பிரச்சினைகள் வேலை நிறுத்தமாக அதிகரித்ததன் காரணமாக பதினேழாயிரத்துத் தொண்ணூற்றைந்து மனித நாட்கள் இழக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2022ஆம் ஆண்டுக்கான தொழிலாளர் துறையின் செயற்திறன் அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த ஆண்டில், 22 வேலை நிறுத்தங்கள் பதிவு செய்யப்பட்டன. அவற்றில் 5,558 தொழிலாளர்கள் பங்கேற்றனர். (நி-5-6)

## தொழில்நுட்பக்கல்வி முறை நாட்டில் வீழ்ச்சியடைந்துள்ளது

### சஜித் பிரேமதாஸ



(கொழும்பு)

இலவசக் கல்வியை நவீனத்துவப்படுத்தி, பல்கலைக்கழகங்களுக்கு தெரிவாகாத மாணவர்களுக்கும் உயர்த்தரக் கல்விக்கான தெரிவை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

வரவு - செலவுத்திட்டம்மீதான குழுநிலை விவாதத்தின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

"எமது நாட்டின் கல்வியானது, புரட்சிகரமான மாற்றத்தை நோக்கி பயணிக்க வேண்டும்.

50 களில் இருந்த சிங்களம் மட்டும்தான் என்றக் கொள்கையுடன், எம்மால் நாடு என்ற ரீதியில் தற்போது முன்னோக்கி நகர முடியாது. எல்லைகளை வகுத்துக் கொண்டு பயணிக்கும் பயணத்தினால் நாட்டுக்கு சௌபாக்கியமான எதிர்காலம் கிடைக்காது.

சிங்கள மொழியுடன், ஏனைய மொழிகளுக்கும் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்.

விசேடமாக ஆங்கில மொழி மூலமான கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய கால கட்டத்தில் நாம் உள்ளோம்.

க.பொ.த. சாதாரண தரப்பரீட்சைக்கு பின்னர் அல்லது அதற்கு முன்னர் பாடசாலைகளை விட்டு வெளியேறும் மாணவர்கள் தொழிற் கல்வியை எதிர்ப்பார்க்கிறார்கள். எனினும், தொ ழில்நுட்பக் கல்விமுறைமையானது நாட்டில் வீழ்ச்சியடைந்துள்ளது.

2 இலட்சத்து 50 ஆயிரம் பேர் உயர்தரப் பரீட்சைக்கு முகங்கொடுத்து, அதில் 15- 20 வீதமானவர்கள் மட்டும்தான் பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யப்படுகிறார்கள்.

ஏனைய 7-8 வீதமானவர்கள் தனியார் பல்கலைக்கழகங்களில் சேர்கிறார்கள். எனினும், எஞ்சியுள்ள 70 வீதமான மாணவர்களுக்கு பட்டப்படிப்பை தொடர முடியாத நிலைமை காணப்படுகிறது. இதனை நிவர்த்தி செய்ய வேண்டுமெனில், நாம் இலவசக் கல்வியை நவீனத்துவப்படுத்த வேண்டும். இதன் ஊடாக பல்கலைக்கழகத்திற்குள் செல்ல முடியாத 70 வீதமானோருக்கு உயர் கல்வியைத் தொடர்வதற்கான தெரிவை நாம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5-6)

## வடக்கு-கிழக்கில் போதைப்பாவனை திட்டமிட்ட வகையில் முன்னெடுப்பு

### கஜேந்திரகுமார் எம்.பி சுட்டிக்காட்டு



(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இளைஞர்களை போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாக்கும் செயற்பாடுகள் திட்டமிட்ட வகையில் முன்னெடுக்கப்படுகின்றன.

இப்பிரதேசங்களில் இராணுவம் அதிகம் குவிக்கப்பட்டுள்ள நிலையில் இராணுவத்தின் பங்களிப்புடன் போதைப்பொருள் அமுல்படுத்தல் செயற்பாடு முனனெடுக்கப்படுகிறது என தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது,

ஆயுத போராட்டத்தையும் போராடுகின்ற மக்களையும் தோற்கடிக்கும் மனநிலையில் தான் இந்த அரசாங்கமும் இராணுவமும் இருக்கின் றன.

இதன் ஒரு கட்டமாக வடக்கு, கிழக்கில் இளைஞர்களை போதைப்பொருளுக்கும் மது பாணங்களுக்கும் அடிமையாக்கும் வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

இராணுவத்திற்கு தெரியாமல் வடக்கு மற்றும் கிழக்கில் இவ்வாறான வேலைத்திட்டத்தை முன்னெடுப்பது சாத்தியமில்லை. எனவே இதற்கு இராணுவத்தின் பங்களிப்பும் உள்ளது.

எனவே போதைப்பொருள் தொடர்பில் உளவள ஆலோசனைகள் முக்கியமாகத் தேவைப்படுகின்றன. ஏனெனில் இவ்வாறான போதைப்பொருள் பாவனைகளை கட்டுப்படுத்தாது விட்டால் அது வேறு மாதிரியான பிரச்சினைகளை கொண்டு வந்து விடும்.

பாடசாலைகளில் உளவள ஆலோசனை திட்டம் இருந்தாலும் அது சிறந்த முறையில் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை. அதற்கு தேவையான ஒதுக்கீடுகள் இல்லை எனவும் அவர் தெரிவித்தார். (நி-5-6)

## ஆசிரியர் வெற்றிடங்களால் கல்வித்தரம் பாதிக்கப்படும் அபாயம்

(கொழும்பு)

அரச பாடசாலைகளில் சுமார் 40,000 ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுவதாக சட்டமா அதிபர் நேற்று முன்தினம் உயர்நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.


பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் குழுவினால் நீதித்துறை செயற்பாடுகளை தவறாகப் பயன்படுத்தி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமையினால் குறித்த வெற்றிடங்களை நிரப்புவதில் தடை ஏற்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் விராஜ்தயாரத்ன குறிப்பிட்டுள்ளார்.

இதனால் அரச பாடசாலைகளின் கல்வித்தரம் பாதிக்கப் படும் அபாயம் உள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அரச பாடசாலைகளில் கடமையாற்றும் வேளையில் பரீட்சை நடத்தி ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு மாகாண கல்வி அமைச்சு எடுத்த தீர்மானத்தை எதிர்த்து மாகாண கல்வி அமைச்சுக்களின் கட்டுப்பாட்டில் உள்ள பாடசாலைகளில் கற்பிக்கும் அபிவிருத்தி உத்தியோகத்தர் கள் குழுவினால் இந்த மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழா வாழ்த்துக்கள்



திரு.கணபதிப்பிள்ளை
சண்முகதாஸ்
(அதிபர்–யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலயம்)

ஆசிரிய சேவை
16.03.1990 - 06.12.2009 வரை

அதிபர் சேவை
07.12.2009 - 04.12.2023 வரை

யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் அதிபராக சேவையாற்றி 05.12.2023 அன்று மணிவிழா கண்ட அதிபருக்கு வாழ்த்துக்கள் தெரிவிப்பதோடு ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய இறைவனை வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர் :
தென்மராட்சி அதிபர் சங்கம்

(C-7815)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




மு/ஒலுமடு தமிழ் வித்தியாலயத்தின் மாணவனான
## சிதம்பரநாதர் பிருந்தாவன்
அவர்கள் தற்போது வெளியான க.பொ.த சாதாரண தர பரீட்சையில் (2022/2023) அனைத்துப் பாடங்களிலும் அதிவிசேட சித்தி (9A) பெற்று உயர்தரத்திற்கு தகுதியானமையை இட்டு பெருமகிழ்ச்சியும் பெருமையுமடைகின்றோம். இவர் கல்வியில் மென்மேலும் உயர்ந்த அடைவுகளைப் பெற்று சிறந்த கல்விமானாகத் திகழ பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்
மு/ஒலுமடு தமிழ் வித்தியாலயம்,
மாங்குளம்.

(18116)

# வெற்றிக்கு காரணம் டோனி
## ஷாய் ஹோப் புகழாரம்

இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரில் மேற்கிந்திய தீவுகள் அணி 6 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.


இப்போட்டியில் மேற்கிந்திய தீவு அணியின் கட்டபடன் ஷாய் ஹோப் அதிரடியாக சத மடித்து வெற் றிக்கு வித்திட்ட தோடு ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்டார்.

ஹோப் தெரிவிக்கையில் சில நாட்களுக்க முன்பாக நான் டோனியிடம் பேசியிருந்தேன். அப்போது டோனி கூறியிருந்தார் ஒரு வீரர் களத்தில் அதிக நேரம் இருக்க வேண்டும் எனக் கூறியது நினைவுக்கு வந்த தால் வெற்றிக்காக விளை யாடினேன். சதம் என்பது கூடுதல் போனஸ். வெற்றியடைந்தது மகிழ்ச்சி எனத் தெரிவித்தார். (நி-5-6)






# மரண அறிவித்தல்



மலர்வு 10 . 01 . 1957

உதிர்வு 03 . 12 . 2023

## கோபால் புவனவதி

வல்வெட்டி தர்மகுலசிங்கம் சனசமூக நிலையத்தினைப் பிறப் பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கோபால் புவனவதி அவர்கள் 03.12.2023 ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.30 மணியளவில் இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - மீனாட்சி தம்பதியினரின் அன்புப் புத்திரியும் காலஞ்சென்றவர்களான சின்னப்பொடி - அழகி தம்பதியினரின் அன்பு மருமகளும் அமரர் கோபால் அவர்களின் அ்ன்பு மனைவியும் சசிகரன்(கனடா), ஜெயமதி(அபிவிருத்தி உத்தியோகத்தர் - வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை -கரவெட்டி), பகீரதி ஆகியோரின் அன்புத் தாயாரும் சுவிதா(கனடா), நீதிராசா(பணியாளர் திக்கம் வடிசாலை), சபேசன் (இ.போ.ச பொறியியல் பகுதி) ஆகியோரின் அன்பு மாமியாரும் அமரர் இரத்தினம், செல்லம்மா(கனடா), விஜயரத்தினம் (கனடா), நிர்மலா(சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் அமரர் பாலசிங்கம், சீவரத்தினம்(கனடா), இராசமலர்(கனடா), சிவசோதிலிங்கம்(சுவிஸ்), அமரர் நாகம்மா, அமரர் தர்மலிங்கம், சின்னக்கிளி(கனடா), அமரர் யோகரத்தினம், ஜெகநாதன் ஆகியோரின் மைத்துனியும் அமரர் ஐயம்பிள்ளை, அமரர் அன்னம், நடேசு(கனடா), அமரர் நாகரத்தினம், பரமேஸ்வரி ஆகியோரின் உடன் பிறவாச் சகோதரியும் சர்மி(கனடா), சுஜன்(கனடா), யுகாஷா, டிலூசன், திலுக்சனா, சுகானுஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 06.12.2023 அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப 2.00 மணியளவில் எள்ளங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பூதவுடல் தீயுடன் சங்கமிக்கும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"புவனகிரி",
தர்மகுலசிங்கம் சன சமூக நிலையம்,
வல்வெட்டி.

தகவல் -
குடும்பத்தினர்
077 058 9554

(C-7816)

# மரண அறிவித்தல்



மலர்வு 27 . 09 . 1956

உதிர்வு 03 . 12 . 2023

## பவளராணி கைலாசநாதன்

யாழ்ப்பாணம் கச்சேரியைப் பிறப்பிடமாகவும் சங்கானையை வதிவிடமாகவும் கொண்ட பவளராணி கைலாசநாதன் அவர்கள் கடந்த ஞாயிற்றுக்கிழமை (03.12.2023) அன்று காலமானார்.

அன்னார் நாகலிங்கம் கைலாசநாதன் அவர்களின் அன்பு மனைவியும் மயில்வாகனம் - நாகரத்தினம் தம்பதியினரின் அன்பு மகளும் பிரியதர்ஷனி(பிரான்ஸ்), காலஞ்சென்ற துஷாந்தன் மற்றும் துஷியந்தன், நிஷாந்தன்(லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஸ்ரீகரன்(பிரான்ஸ்), கலாநிதி, தமிழினி(லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் அபிஷேக், ஆகாஸ், ஆதவன், அர்ச்சுன் (பிரான்ஸ்), அஸ்வின், நிதுக்ஷா(லண்டன்) ஆகியோரின் ஆருயிர் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.12.2023) காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் சங்கானை கரைச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் -
குடும்பத்தினர்

(18115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாடசாலைகளுக்கு உள்ளீர்க்கும் மாணவர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி

## பிறப்பு வீதம் குறைவடைந்ததே காரணம் என்கிறார் கல்வி அமைச்சர்

(கொழும்பு)
நாட்டில் பிறப்பு சதவீதம் குறைந்தமையால் பாடசாலைகளுக்கு உள்ளீர்க்கும் மாணவர்களின் எண்ணிக்கை 50 ஆயிரமாக குறைந்துள்ளது என கல்வியமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளுக்கு ஐந்து வயது நிறைவடைந்தவுடன் மாணவர்களாக உள்ளீர்க்கும் செயற்பாடு முன்னெடுக்கப்படுகின்றது.

பாடசாலைகளுக்கு தற்போது உள்ளீர்க்கும் பிள்ளைகளின் எண்ணிக்கை 2 இலட்சத்து 90 ஆயிரம் பேர் ஆகும்.

எனினும், இன்றைக்கு பத்து வருடங்களுக்கு முன்னர் பாடசாலைகளுக்கு 3 இலட்சத்து 40 ஆயிரம் பிள்ளைகள் உள்ளீர்க்கப்பட்டனர்.

பாராளுமன்றத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் கல்வியமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே கல்வி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (நி-5-6)

# புலமைப்பரிசில் பரீட்சையை ரத்து செய்ய வேண்டும்

## பாராளுமன்றில் கோரிக்கை



(கொழும்பு)
ஐந்தாம் புலமைப்பரிசில் பரீட்சையை இல்லாது செய்ய வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கோரிக்கை ஒன்றை முன்வைத்துள்ளார்.

கல்வி அமைச்சின் வரவு-செலவுத் திட்டம் மீதான பாராளுமன்ற விவாதத்தில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

5ஆம் புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள் வெளியானதையடுத்து 99% தாய்மார்களும் பிள்ளைகளும் மன ரீதியாக பாதிப்புக்குள்ளாகியுள்ளதாக சுட்டிக்காட்டிய அவர்மேலும்தெரிவிக்கையில்,

புலமைப்பரிசில் பரீட்சை எழுத முடியாத நிலையிலேயே பிள்ளைகளுக்கு வினாத்தாள்கள் கிடைக்கப் பெற்றுள்ளது. உலகில் அபிவிருத்தியடைந்த நாடுகளில் உள்ளது போன்று ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையை இல்லாது செய்ய வேண்டும்.

நான் ஜனாதிபதியாக இருந்த காலத்திலும் அதற்கான முயற்சிகளை மேற்கொண்டேன். பல அபிவிருத்தியடைந்த நாடுகளில் எட்டு வருடங்கள் வரை கூட பரீட்சை கிடையாது.

இந்நிலையில், ஐந்தாம் புலமைப்பரிசில் பரீட்சை பிள்ளைகளுக்கும் பெற்றோர்களுக்கும் பெரும் சுமையாக உள்ளது என அவர் தெரிவித்தார். (நி-5-6)

# கரைச்சி வடக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ-து) பரந்தன்

## பதிவு இலக்கமும் திகதியும் - pa/47 of 10.02.1971

## கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான அறிவித்தல்

மேற்படி எமது சங்கத்தின் பதினாறு (16) கிளைகளுக்குமான கிளைக்குழு உறுப்பினர் தெரிவிற்கான கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் 2023.12.09ஆம் திகதி சனிக்கிழமை மு.ப 10.00 மணிக்கு பின்வரும் இடங்களில் நடத்துவதற்கு சங்கத்தால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கிளைப் பொதுச்சபைக் கூட்டங்களுக்கு சமுகமளிக்க தகைமையுள்ள சகல உறுப்பினர்களுக்குமான கூட்ட அழைப்பிதழ்கள் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கு சமுகமளிக்க தகைமையுடைய அழைப்பிதழ் கிடைக்கப் பெறாத உறுப்பினர்கள் இவ் அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கு சமுகமளித்து கிளைக்குழு தெரிவு நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**கிளைப்பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பானவிபரம்**

| இல | கிளையின் பெயர் | கி.இல | தவிசாளர் பெயர் | கிளைக்குழுத் தெரிவுநடைபெறும் இடங்கள் |
|---|---|---|---|---|
| 01 | பரந்தன் | 01 | இ.ஜெகதீபன் | பொதுநோக்குமண்டபம்,பரந்தன் |
| 02 | இரணைமடுமேற்கு | 02 | இ.விஜயகுமார் | பொதுநோக்குமண்டபம,பன்னங்கண்டி |
| 03 | முரசுமோட்டை | 03 | க.செல்வகுமார் | முரசுமோட்டைபொதுநோக்குமண்டபம், |
| 04 | ஊரியான் | 04 | சோ.கிருஸ்ணகுமார் | பொதுநோக்குமண்டபம் (கிராமசேவையாளர் அலுவலகம்) ஊரியான் |
| 05 | கண்டாவளை | 05 | க. சுரேஸ்பாபா | பொதுநோக்குமண்டபம்,கண்டாவளை |
| 06 | புளியம்பொக்கணை | 07 | அ.பிரமிளன் | பொதுநோக்குமண்டபம்,நாகேந்திரபுரம் |
| 07 | கலவெட்டித்திடல் | 08 | ப.து.றோய் டனிஸ்ரன் | பொதுநோக்குமண்டபம்,கலவெட்டித்திடல் |
| 08 | புன்னைநீராவி | 09 | பெ.பவள்ராஜ் | புன்னைநீராவிபடித்தவாலிபர் திட்டம் பொதுநோக்குமண்டபம்,புன்னைநீராவி |
| 09 | உமையாள்புரம் | 10 | க.சசிகரன் | பொதுநோக்குமண்டபம்,உமையாள்புரம் |
| 10 | தட்டுவன்கொட்டி | 11 | அ.ஜேம்ஸன் | பொதுநோக்குமண்டபம்,தட்டுவன்கொட்டி |
| 11 | ஆனையிறவு | 12 | பா.ரூபராஜ் | பொதுநோக்குமண்டபம்,ஆனையிறவு |
| 12 | குமரபுரம் | 13 | வ.நிதர்சன் | பொதுநோக்குமண்டபம்,குமரபுரம் |
| 13 | பொறிக்கடவை | 14 | ப.சஞ்சீவன் | பொதுநோக்குமண்டபம்,குஞ்சுப்பரந்தன் |
| 14 | தருமபுரம் | 15 | செ.ஜெயராசா | பொதுநோக்குமண்டபம்,தருமபுரம் கிழக்கு |
| 15 | பிரமந்தனாறு | 16 | இ.சுதன் | பொதுநோக்குமண்டபம்,பிரமந்தனாறு |
| 16 | கல்மடுநகர் | 17 | வி.முகுந்தன் | பொதுநோக்குமண்டபம் (கிராமசேவையாளர் அலுவலகம்) கல்மடுநகர் |

**செயலாளர்,**
**கரைச்சி வடக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்,**
**பரந்தன்.**

(சி-7811)

# இராசிபலன்

06.12.2023
கார்த்திகை 20, புதன்கிழமை
நவமி பின்னிரவு 2.17 மணிவரை
உத்தரம் பின்னிரவு 6.11 மணிவரை

சுபநேரம் -4.47-6.17மணிவரை
இராகுகாலம்-12.17-1.47 மணிவரை

சந்திராஷ்டமம்
சதயம்

வளவன்




தொலைபேசி வழியில் கேட்கும் செய்தியால் உற்சாகமடைவீர்கள், தேக நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், மற்றவர்களின் மன நிலையை அறிந்து செயற்படுவீர்கள்.




புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், கூட்டு முயற்சிகள் வெற்றி தரும்.




நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், தொழில் நலன் கருதிய பயணங்கள் இடம்பெறலாம்.




அரைகுறையாக இருந்த பணிகளை இன்று செய்து முடிப்பீர்கள், குறை சொல்லியவர்கள் பாராட்டும் நாள், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும்.




பிள்ளைகளின் தேவையறிந்து செயற்படுவீர்கள், கனவுகள் நனவாக இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், தாழ்ந்த சுபவமுண்டு.




புண்ணிய காரியங்களில் ஈடுபாடு காட்டுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள்.




குடும்பத்தில் குதூகலம் கூடும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், காரிய அனுகூலமுண்டு, இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.




குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், எடுத்த காரியங்கள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், நிதானத்துடன் செயற்பட்டு நிம்மதி காண வேண்டிய நாள்.




தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம்.




பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், விரும்பிய உணவுப் பொருட்களை வாங்கும் ஆர்வம் காட்டுவீர்கள், கற்பனை மிகுதியான நாள்.




செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர்கள் உங்களின் முன்னேற்றம் கண்டு ஆச்சரியப்படுவர், குடும்ப ஒற்றுமை கூடும் நாள்.




சொந்த பந்தங்களின் வருகையால் சிந்தை மகிழ்வீர்கள், வழிபாடு விருப்பத்தை நிறைவேற்றும், கௌரவமான நாள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

நம்பிக்கை நிறைந்த ஒருவர் யாரிடமும் எப்போதும் மண்டியிடுவது இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடு புகுந்து திருட முற்பட்ட நபரை மடக்கிப் பிடித்த மக்கள்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி-கல்வயல் பகுதியில் வீடு புகுந்து திருட்டு முயற்சியில் ஈடுபட்ட இளைஞன் ஒருவனை நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் கிராம மக்கள் மடக்கிப் பிடித்து சாவகச்சேரிப் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

கல்வயல்-பெருங்குளம் பகுதியில் உள்ள இரண்டு வீடுகளுக்குள் புகுந்து திருட்டு முயற்சியில் ஈடுபட்ட 18வயதான சந்தேகநபரை கிராம மக்கள் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இளைஞனை கைது செய்த சாவகச்சேரிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன் சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-5-6-30)

# தேசியமட்ட நடனப் போட்டி நுணாவில் அரசினர் முதலிடம்



(சாவகச்சேரி)

தேசியமட்ட புத்தாக்க நடன போட்டியில் யா/கைதடி நுணாவில் அரசினர் தமிழ்க் கலவன் பாட சாலை மாணவர்கள் 1 ஆம் இடத்தினைப் பெற்றுள்ளனர்.

தேசியமட்ட போட்டிகள் அண்மையில் அநுராதபுரத்தில் நடைபெற்றது. இதில் புத்தாக்க நடனப்போட்டியில்1ஆம் இடத்தினையும் தனி இசை நிகழ்வில் து.ரஜிசன் மூன்றாம் இடத்தினையும் பெற்றுள்ளனர். (நி-5-6-30)

# வீட்டுத்திட்ட விண்ணப்பங்களை ஏற்கும் காலம் இறுதிக்கட்டத்தில்

(கொழும்பு)

வடக்கு மாகாணத்திற்கான, தலா 50 இலட்சம் ரூபாய் பெறுமதியான இருபத்தையாயிரம் சூரிய மின்னுற்பத்தி இலவச வீட்டுத்திட்டத்திற்குரிய விண்ணப்பங்களை ஏற்கும் நடவடிக்கை இறுதிக் கட்டத்தை எட்டியுள்ள நிலையில் குறித்த திட்டத்துக்கு விண்ணப்பிக்காத தகுதியுள்ள பயனாளிகள் எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு வட மாகாண ஆளுநர் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

யாழ்ப் பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய ஐந்து மாவட்டங்களிலும் இந்த வீட்டுத்திட்டத்திற்கு இதுவரை விண்ணப்பிக்காதவர்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும்.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய, முன்னெடுக்கப்படவுள்ள இந்த வீட்டுத் திட்டத்திற்கான விண்ணப்பங்கள் மாவட்டச் செயலாளர்கள் மற்றும் பிரதேச செயலாளர்கள் ஊடாக ஏற்கப்பட்டு வருகிறமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6-33)



மறைந்த ஊடகவியலாளர் நிபோஜனின் குடும்பத்தினருக்கு கனடா செந்தில் குமரனின் நிவாரண அமைப்பின் ஏற்பாட்டில் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் நோக்கில் மூன்று இலட்சம் ரூபாய் பெறுமதியான தையல் பொருட்கள் நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டது.

(படம்:-சதீஸ்)

## தொழிற்கல்விக்கான அனுமதி வழங்கல்

(யாழ்ப்பாணம்)

க.பொ.த (உ/தர) பிரிவில் பயின்று NVQ -04 தர சான்றிதழை பெறுவதற்கு ஒரு சந்தர்ப்பம் கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளது.

2021(2022) மற்றும் 2022 (2023) ஆம் ஆண்டு க.பொ.த (சா/தர) பரீட்சைக்கு தோற்றியிருப்பின் 13 வருட உத்தரவாத மளிக்கப்பட்ட கல்வி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தொழிற் கல்வியினை தொடருவதற்கு அனுமதிக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. அதற்கான குறித்த படிவத்தை யாழ்.மத்திய கல்லூரியின் கூட்டுறவு சங்கத்தில் எதிர்வரும் 11.12. 2023 முதல் பாடசாலை நேரத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் 30.01.2024 இற்கு முன் தொழில்கற்கை பிரிவுக்கான அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட வேண்டும்.

மட்டுப்படுத்திய அனுமதியே வழங்கப்பட்டுள்ளதால் நேர்முகத் தேர்வின் அடிப்படையிலேயே மாணவர்கள் இக் கற்கைநெறிக்கு உள்வாங்கப் படுவார் என யாழ்.மத்திய கல்லூரியின் அதிபர் அறிவித்துள்ளார். (நி-5-6)

## கஞ்சாவுடன் ஒருவர் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாவற்குழிப் பிரதேசத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு 50கிராம் கஞ்சா போதைப் பொருளுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சாவகச்சேரிப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கமைவாக குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது கைதான சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான ஏற்பாடுகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-5-6-30)

# க.பொ.த சா/த (2022) பரீட்சைப் பெறுபேறுகள்

## யா/வேம்படி மகளிர் கல்லூரி

### 9 A தமிழ்மொழி

ஏ.அல்றின்றொசானி, வி.அஸ்வினி, ரி.கஜானி, வி.மாதுமை, பி.நிருஸ்திகா, எஸ்.பிரணவி, ஏ.சயுரி, வி.சிறிவைஷ்ணவி, ஜே.தகினி, கே.ஆர்த்திகா, ரி.லிபானுஜா, பி.நிதிஷா, எஸ்.நிவேனிகா, எஸ்.நிவேதிதை, யு.பிரணவிக்கா, பி.பிரியங்கா, வை.புகழினி, எம்.சரண்ஜா, எம்.சாருஜா, எம்.சாளினி, பி.சிறியாழினி, ஜே.சுவேதினி, ஜே.தேனுஜா, ஆர்.விதுஷா, என்.விதுசிகா, ஜி.வைஷ்ணவி, எ.ஆராவி, எம்.அபினயா, ஆர்.அரனிகா, கே.காவேரி, எம்.ஹறினி, வி.கயூறா, எ.ஹம்சவர்த்தினி, வி.கோபிகா, எ.பிரவினா, கே.சாதுரியா, ஆர்.சங்கவி, ஐ.தர்சிஜா, எ.தாதுஷா, எஸ்.வைஷ்ணவி, எஸ்.வைஷாலி, க.அம்பிகா, எஸ்.அஸ்மிதா, எஸ்.எமிழிசை, பி.ஜாண்சிகா, எஸ்.கஜாந்தினி, எஸ்.கருணிகா, கே.கீர்த்தனா, வி.கிருசிகா, வி.மோதலி, கே.பிரவினா, எம்.பிரகஸ்வினி, கே.சங்கராணி, ஜே.சிந்துஜா, எஸ்.சிறிசுஜிபா, எஸ்.சுதுதி, ஐ.தர்ஷனா, கே.திவ்யா, எஸ்.வைஷ்ணவி, எஸ்.வர்சினி, கே.யதுவர்சி,

### 9 A ஆங்கில மொழி

பி.அபிசனா, எஸ்.நிவேதிதா, எ.அக்ஷயா, எஸ்.பார்கவி, ஆர்.பிருந்தா, எம்.காருண்யா, கே.ஹரினி, ஆர்.ஜெனனி, யு.ஜேயனி, ஆர்.ஜிதுஷா, கே.கயல்விழி, எஸ்.குகவைஷ்வி, எல்.லக்சனா, கே.லோகினி, எஸ்.மிசாலி, ரி.மோகனமயூரி, எஸ்.சாருகா, ஜே.சாதுர்னா, கி.சதுர்சிகா, எஸ்.சிவதுர்க்கா, எஸ்.சிறிவைஷ்ணவி, ஆர்.சுவேதிகா, ரி.தாரணி, பி.தாருனிகா, வை.திஷானி, எம்.வாசனா, எஸ்.யதுர்சிகா, கி.ஆராதனா, எச்.ஆர்த்தி, வி.அபிதா, எஸ்.அபின்யா, யு.அபிஷா, எம்.அபிவர்சினி, கே.அபிஷாயா, பி.அஞ்சனா, ஜி.அதிசயா, ரி.டிலானி, ரி.கவிநயா, எஸ்.மானசிகா, எஸ்.மாருதபரணி, எ.மெல்சா, ரி.நிருபனா, பி.நிசாயினி, எ.பிரகாசனா, ஆர்.சங்கவி, வி.சாதுசிகா, கே.சங்கவி, எஸ்.சிவனுகா, ஜி.சிவானுஜா, வி.திஷானா, பி.துஷாரி, ஆர்.விருகினிசாருகா, எஸ்.விநாகை, கே.யானுசா,

### 8 A தமிழ்மொழி

கே.அபிஸ்னுகா, எஸ்.அனிற்றி, கே.அங்கவி, ரி.பாணுஷா, ரி.பிருந்தா, கு.கலையரசி, வி.லிஸ்மிகா, வி.நிலக்ஷனா, கே.தனுப்பிரியா, வை.தாருணிகா, எஸ்.தேசினி, எம்.விஷ்ணுயா, ஜி.அஸ்வினி, கே.கரிஸ்ணவி, எல்.கோதையழகி, எம்.லிமிதா, வி.பவிசாளினி, ரி.சங்கீதனி, வை.சிவகாமி, வி.சிவோதமபுசானி, ரி.சுவேதிகா, எஸ்.துசிதா, எஸ்.ஆரபி, ஜே.டபோதினி, ஜி.கௌசிகா, என்.சைந்தவி, பி.தக்ஷிகா, ஆர்.அபிசாளினி, பி.கவிசா, வி.பிருத்திகா, ரே.சோபிகா, ஆர்.தாருண்யா, சி.அன்பிருந்தா, எஸ்.ஆரணி, இ.திகல்யா, ஆர்.மிகிதா.

### 8 A ஆங்கில மொழி

பி.கிசானி, எஸ்.பிரணவி, எஸ்.அபிராமி, எஸ்.பவானுஜா, பி.கஜபிரியா, எம்.றுக்ஷிகா, ரி.சமிக்சா, எஸ்.சங்கிதா, எஸ்.சத்தியஜனனி, ஜி.சாருகாசினி, ஆர்.திலக்ஷி, எஸ்.அபிநயா, கே.பிரகவி, கே.பிரணியா, சி.கிருஸ்ரினா அனுஸ்ரியா, எம்.மிதினிகா, கே.சுவேதிகா, ஆர்.கஸ்வினி, எஸ்.கவீனா, ரி.மயூரி, ஜே.நிதுசாயினி, எஸ்.பிரகாசினி, எ.சிறோமியா.

## யா/இந்துக்கல்லூரி

### 9 A

எ.மதுராங்கன், எ.நிவேதன், எ.ஆருத்தன், சி.பவித்திரன், ஜி.திவ்யசாகர், ஜி.மிதுராஜ், எச்.ஜெகப்பிரியன்,ஜே.பிறின்சின்டன், கே.துஷானன், எல்.லுக்சிகன், எம்.அபிசாங்கர், என்.துசிகரன், என்.அபிசரன், ஆர்.கரிஸ்னன், எஸ்.ஆராதனன், எஸ்.கஜானன், ரி.காருந்யன், வி.துகிலன், வி.தேனுகர்சன், வி.அட்சயன், வி.கிருதியன், வி.அபிசேக், எ.அரவிந்தன், பி.விபோதன், பி.டினுச், சி.சங்கீர்த்தன், ஜி.நிதுசன், எச்.ஜங்கரன், ஜெ.கேதுசாந், ஜெ.சாரன்யன், கே.வித்தகன், கே.திவியன், பி.சரண்யன், பி.நிவேஜிதன், ஆர்.திவ்யன், எஸ்.அட்சயன், எஸ்.பிரணவன், எஸ்.மிதிலன், எஸ்.யோகிதன், எஸ்.விந்துஜன், எஸ்.லக்சிகன், வி.பரோகன், வி.சண்முகன், ஜி.பிருந்தன், கே.கரிஷ்வரன், கே.கலைமாறன், கே.அட்சயன், கே.தர்சனன், எம்.தனுசியன், என்.பானுயன், எஸ்.சோபிதன், எஸ்.ரதீபன், பி.அனுராம், ஜெ.ஜெனிஸ்ரன், எல்.சஞ்சித், எம்.அன்பரசன், என்.கரிஸ்சாந், பி.அவிசாந், பி.கௌசிகன், எஸ்.தாரணியன், ரி.ஆரமுதன், கே.கிருத்திகன், எம்.யுவராஜ், ஆர்.வினோஜன், ஆர்.கஜீபன், ஆர்.நிதுசன், எஸ்.ரதுஜன், எஸ்.சாருஜன், ரி.செந்துரன், என்.மகிழினியன், ஆர்.அபிநயன், எஸ்.கலாபன், எஸ்.தாருண்ஜன், ரி.துஷாந்தன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் போனோர் தொடர்பான முறைப்பாடுகளுக்கு அடுத்த வருடத்தில் தீர்வு

## நீதி அமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

**காணாமல் போனோர் அலுவலகத்திற்குக் கிடைக்கப்பெற்ற அனைத்து முறைப்பாடு களையும் அடுத்த வருடத்திற்குள் நிறைவு செய்ய எதிர்பார்ப்பதாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குற்றவியல் வழக்குகளை விரைவாகத் தீர்க்க உலகில் ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைகள் உள்ளன. ஆனால் நம் நாட்டில் மிகவும் காலாவதியான சட்டக் கட்டமைப்பே உள்ளது.

எனவே, ஒரு குற்றவியல் வழக்கை நிறைவு செய்வதற்கு அதிக காலம் எடுக்கின்றது.

அந்த வழக்குகள் தாமதமாவதால் யாருக்கும் நீதி கிடைக்காது. இதனால் இரு தரப்பினரையும் சமரசம் செய்து, குறைந்த தண்டனையுடன் வழக்கை நிறைவு செய்ய வாய்ப்புள்ளது.

காணாமல் போனோர் அலுவலகத்தில் சுமார் 14 ஆயிரம் முறைப்பாடுகள் உள்ளன. இந்த அமைச்சை நாங்கள் பொறுப்பேற்ற போது 62 முறைப்பாடுகள் மாத்திரமே விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தன.

இன்றைய நிலவரப்படி 4795 முறைப்பாடுகளின் விசாரணைகள் நிறைவடைந்துள்ளன. காணாமற்போனோர் அலுவலகத்திற்குக் கிடைக்கப்பெற்ற அனைத்து முறைப்பாடுகளையும் அடுத்த வருடத்திற்குள் நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படுகின்றது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5-6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 450 | 500 | 450 | 450 |
| உருளைக்கிழங்கு | 220 | 210 | 200 | 220 |
| பச்சைமிளகாய் | 800 | 1200 | 1000 | 800 |
| தக்காளி | 600 | 600 | 700 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 150 | 150 |
| கோவா | 350 | 380 | 380 | 500 |
| கரட் | 400 | 460 | 450 | 500 |
| பூசணி | 120 | 120 | 120 | 120 |
| புடோல் | 300 | 250 | 200 | 300 |
| வாழைக்காய் | 200 | 200 | 180 | 300 |
| சின்ன வெங்காயம் | 380 | 350 | 400 | 450 |
| பெரிய வெங்காயம் | 300 | 260 | 280 | 300 |
| பாகற்காய் | 600 | 500 | 500 | 800 |
| வெண்டக்காய் | 300 | 220 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 100 | 100 | 140 |
| பயற்றங்காய் | 550 | 600 | 450 | 500 |
| லீக்ஸ் | 300 | 340 | 320 | 600 |
| பீற்றூட் | 300 | 300 | 450 | 600 |
| கறிமிளகாய் | 600 | 800 | 700 | 800 |
| முருங்கைக்காய் | 800 | --- | 600 | 1600 |
| போஞ்சி | 550 | 600 | 450 | 600 |
| கத்தரிதம்புள்ள | 400 | 400 | 450 | 400 |
| கீரை - 1 பிடி | 150 | 120 | 120 | 200 |
| தேசிக்காய் | 1000 | 1000 | 800 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 80 | 70-100 |
| இராசவள்ளி | 450 | 450 | 550 | 500 |
| வெங்காயப்பூ | --- | --- | --- | --- |
| முள்ளங்கி | 150 | 180 | --- | 300 |
| பொன்னாங்காணி | 100 | 80 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 35 | 50 | 60 |
| ஈரப்பலா | 200 | 150 | --- | 250 |


பாராட்டி வாழ்த்துகிறோம்



06.12.2023 இன்று
இலங்கை உயர்நீதிமன்றத்தில்
சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம்
செய்து கொள்ளும்

திரு. பத்மராசா
பத்மநாபா

(காரை பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர் B.A.LL.B)

அவர்களை மனதார
பாராட்டி வாழ்த்துவதோடு
அவர் மேலும் பல பட்டங்களைப் பெற்று
வாழ்வின் மகத்தான நிலையினை
அடைய சங்கானை வெல்வில்
முருகனை வேண்டி நிற்கின்றோம்.

முருகமூர்த்தி வீதி,
சங்கானை. (18109)

வாழ்த்துவோர்-
திருநாமம் குடும்பத்தினர், சங்கானை.



சேவை நயப்பும்
மணிவிழா வாழ்த்தும்

திரு. ஐயம்பிள்ளை
கேசவன்



பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி ஆசிரியர்

சேவை விபரம்

கிளி/வேரவில் இந்து மகா வித்தியாலயம்
ஆசிரியர்-(16.03.1990-12.08.2002)
கிளி/கிராஞ்சி அ.த.க பாடசாலை
அதிபர்- (13.08.2002-03.01.2016)
கிளி/வேரவில் இந்து மகா வித்தியாலயம்
அதிபர்-(04.01.2016-இன்று வரை)

06.12.2023 இல் அறுபதாம் அகவையில் அதிபர்
பணியில் இருந்து ஓய்வுபெறும் எமது அதிபரின் ஓய்வுக் காலம்
சீரும் சிறப்புமாக அமைய மனமார வாழ்த்துகிறோம்.

இவரின் மேலதிக சேவைகள்

தலைவர் மனிதம் சனசமூக நிலையம் (கிராஞ்சி)
செயலாளர் சிக்கன கூட்டுறவு சங்கம் (ஸ்ரீகுமரன் கிராஞ்சி)
சிவில் பாதுகாப்பு தலைவர் (கிராஞ்சி)
சிவில் பாதுகாப்பு உறுப்பினர் (ஜெயபுரம்)
நலன்புரி சங்க உறுப்பினர் (வேரவில் மருத்துவமனை)
கிராம எழுச்சி குழு உறுப்பினர் (கிராஞ்சி)
சுகாதார மேம்பாட்டு குழு உறுப்பினர் (வேரவில்)
மாவட்ட சிக்கன கூட்டுறவு சங்கம் (கிளிநொச்சி மாவட்டம்)

(18043)

வாழ்த்துவோர்: ஊர்மக்கள்
வேரவில், கிராஞ்சி, பொன்னாவெளி, வலைப்பாடு.



பாராட்டி வாழ்த்துகின்றோம்



கடந்த 04.11.2023 இல்
அதிபர் சேவை தரம் III இல்
நியமனம் பெற்ற எமது பாடசாலை
ஆசிரியை

திருமதி. குமணன்
குமுதா

BA (Hons), PGDE, MEd SLPS III

பாராட்டி வாழ்த்துவதோடு
மேலும் பதவி உயர்வுகள் பெற்று
சேவையில் சிறந்து விளங்க
பாடசாலைச் சமூகம் சார்பாக
வாழ்த்துகின்றோம்.

(17724)

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
(யா/கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# ‘மிக்ஜாம்’ புயலின் கோர தாண்

# வெள்ளத்தில் மூழ்கிய த



- கட்டடம், மரம் விழுந்து எண்மர் உயிரிழப்பு
- சுமார் 150 விமான சேவைகள் பாதிப்பு
- 10 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் முகாம்களில்

(டில்லி)

**“மிக்ஜாம்” புயலினால் தமிழகத்தின் சென்னை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டதோடு 8 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர்.**



மிக்ஜாம் புயலால் பெய்த கனமழை காரணமாக மின்சாரம் பாய்ந்தும் கட்டடம், மரம் விழுந்தும் 8 பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் கடற்கரையோரத்தில் வசிக்கும் மக்களும் பாதுகாப்புக் கருதி அரசு நிவாரண முகாம்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர். இவ்வாறு நகர் முழுவதும் சுமார் 10 ஆயிரம் பேர் மீட்கப்பட்டதாக அரச பொலிஸ் தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

தொடர்ந்து பெய்த கனமழையால் செம்பரபாக்கம் ஏரியில் நீர் அதிகரித்துள்ளது. 8 அடி அளவுக்கு மேலதிக நீர் திறந்து விடப்பட்டுள்ளதால் குன்றத்தூர் - ஸ்ரீ பெரும்புதூர் வீதி தண்ணீரில் மூழ்கி 20 இற்கும் மேற்பட்ட கிராமங்களுக்கான போக்குவரத்து தடைப்பட்டுள்ளது.

மிக்ஜாம் புயல் தாக்கம் காரணமாக சென்னை விமான நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த விமான சேவைகள்

மீண

ள்ள

செ

மாக

யம்

150

கப்ப

எ

நிை

வா

சே

அறி

செ

சா

## அகதிகள் முகாம்கள் மீது இஸ்ரேல் தாக்குதல்

### சுமார் 50 பேர் பலி



(காசா)

காசா நகரத்தில் உள்ள அல்-தர்ராஜ் பகுதியில் இடம்பெயர்ந்தவர்கள் தங்கியிருந்த இரண்டு பாடசாலைகளை குறிவைத்து இஸ்ரேலியப் படையினர் நடத்திய தொடர்ச்சியான தாக்குதல்களில் சுமார் 50 பொதுமக்கள் கொல்லப்பட்டதோடு நூற்றுக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர்.

பாலஸ்தீனிய அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் முகவரமைப்பால் நடத்தப்படும் பாடசாலை மற்றும் அல்-தர்ராஜ் பகுதியில் உள்ள தியாகி அசாத் சஃப்தாவி பாடசாலை ஆகியவற்றின் மீது இஸ்ரேலிய போர் விமானங்கள் மற்றும் பீரங்கிகள் மூலம் சரமாரியான ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அப்பகுதி மீது தீவிரமான ஷெல் தாக்குதலின் விளைவாக உயிரிழந்தவர்களின் உடல்கள் மற்றும் காயமடைந்தவர்களை மீட்க பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக அம்புலன்ஸ் குழுவினர் தெரிவித்தனர். (நி-5-6)

## விடுவிக்கப்பட்ட பணயக் கைதிகளை மீண்டும் கைது செய்த இஸ்ரேல்



(காசா)

இஸ்ரேல் இராணுவத்தால் 60 பாலஸ்தீனர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களில் போர் நிறுத்தத்தின் போது விடுவிக்கப்பட்ட கைதிகளும் உள்ளடங்குவதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இஸ்ரேல்-ஹமாஸ் போர் நிறுத்தம் முடிவுக்கு வந்ததையடுத்து காசா பகுதியில் தரை வழித் தாக்குதலை இஸ்ரேல் இராணுவம் விரிவுபடுத்தியுள்ளது.

கைது செய்யப்பட்ட பாலஸ்தீனர்கள் குழு பெத்லஹேமில் உள்ள அகதிகள் முகாமில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக [illegible] வெளியிட்டுள்ளது.

ஒரு நாளில் மட்டும் காசா பகுதியில் நடந்த தாக்குதல்களில் 800 இற்கும் அதிகமானோர் கொல்லப்பட்டதுடன் இதுவரை சுமார் 16000 பேர் உயிரிழந்துள்ளனர். (நி-5-6)

மேலும் காசா பகுதியின் அனைத்து மாகாணங்களிலும் இஸ்ரேலிய இராணுவம் படையெடுத்துள்ளதுடன், ஹமாஸ் அமைப்பின் உறுப்பினர்களைத் தேடும் நடவடிக்கை மேலும் தொடர்கின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ண்டவத்தால்

# தமிழகம்



மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வெள்ள அனர்த்தம் காரணமாக சென்னை விமான நிலையம் மூடப்பட்டுள்ளதால் சுமார் 150 விமான சேவைகள் பாதிக்கப்பட்டிருந்தன.

எவ்வாறாயினும் இயல்பு நிலை திரும்பாததால் குறைவான அளவிலேயே விமான சேவைகள் இடம்பெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை பெருங்களத்தூரில் சாலையில் முதலை நடந்து சென்ற வீடியோ வெளியான நிலையில் அருகில் உள்ள நீர்நிலைகளுக்குள் மக்கள் இறங்க வேண்டாம் என்று வனத்துறை அலுவலர் தெரிவித்திருந்தார்.

அந்தப் பகுதிக்கு வனத்துறை ஊழியர்கள் அனுப்பப்பட்டு முதலை தென்பட்டால் அது மீட்கப்பட்டு கொண்டு செல்லப்படும் என்றும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# அரசாங்கத்தை ஆயுதமாக பயன்படுத்துகிறார் பைடன்

## ட்ரம்ப் சாடல்



(வோஷிங்டன்)

தன்னுடைய அரசியல் எதிரிகளுக்கு எதிராக அரசை ஆயுதமாக ஜனாதிபதி பைடன் பயன்படுத்தி வருகிறார் என முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அயோவா மாகாணத்தின் ஸீடர் ரேபிட்ஸில் நடைபெற்ற குடியரசுக் கட்சி பொதுக் கூட்டத்தில் டொனால்ட் ட்ரம்ப் பேசுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி விடயம் தொடர்பில் மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

"பைடனும் அவரது கூட்டாளிகளும் ஜனநாயகத்துக்கு துணை நிற்பது போல் தோற்றமளிக்கின்றனர். ஆனால், பைடன் அமெரிக்க ஜனநாயகத்தின் பாதுகாவலர் அல்லர்.

ஜனநாயகத்தை அவர் அழித்து வருகிறார். போதைப் பொருள் கடத்தல்காரர்களுக்கு எதிராக சீனாவின் குற்றவியல் நீதித்துறை அமைப்பு கடும் நடவடிக்கை எடுத்து வருகிறது.

சீனாவுடனான உறவு சீன ஜனாதிபதி ஷி ஜின்பிங், வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் ஆகியோருடன் நட்புறவைக் கடைப்பிடித்தற்காக பலமுறை விமர்சனத்துக்கு உள்ளானேன்.

அணு ஆயுதங்களை வைத்துள்ள இத்தகைய நாடுகளுடன் நல்ல நட்புறவைக் கொண்டிருப்பது நல்லது.

2020, ஜனாதிபதி தேர்தலில் முறைகேடு நடந்தது என்பதற்கு எவ்வித ஆதாரமும் இல்லை. இது தொடர்பான வழக்குகளை நீதிமன்றங்கள் தள்ளுபடி செய்துள்ளன.

2024 தேர்தலின்போது ஜனநாயக கட்சியினர் முறைகேட்டில் ஈடுபட வாய்ப்புள்ள டெட்ராய்ட், அட்லாண்டா நகரங்களுக்கு குடியரசுக் கட்சியினர் சென்று வாக்குகளைப் பாதுகாக்க வேண்டும்" எனத் தெரிவித்தார். (நி-5-6)

# புலம்பெயர்வை குறைப்பதற்காக கடுமையான நடவடிக்கை

## பிரித்தானிய பிரதமர்

(லண்டன்)

பிரித்தானிய அரசாங்கம் புலம்பெயர்வைக் குறைப்பதற்கான கடுமையான நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது.

உத்தியோகபூர்வ புள்ளி விபரங்களின்படி 2022 இல் இங்கிலாந்திற்கு நிகர இடப்பெயர்வு 7,45,000 ஆக உயர்ந்ததை தொடர்ந்தே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.இது தொடர்பில் இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக் தெரிவிக்கையில், குடியேற்றம் மிக அதிகமாக உள்ளது. இன்று நாம் அதைக் குறைக்க தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

இந்த நடவடிக்கைகள் இங்கிலாந்துக்கு நன்மையளிப்பதோடு பிரித்தானிய வரலாற்றில் இதுவரை இல்லாத அளவுக்கு புலம்பெயர்தலை குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் தெரிவித்துள்ளார்.



விசா நிபந்தனைகள் அதன்படி வெளிநாட்டுப் பராமரிப்புப் பணியாளர்கள் தங்கள் குடும்பத்தைச் சார்ந்தவர்களை அழைத்து வர முடியாது.

ஒரு தொழிலாளர் விசா விண்ணப்பத்திற்கான வரம்பு £26,200 இலிருந்து £38,700 ஆக உயர்வடைந்துள்ளது. குடும்ப விசாவிற்கான குறைந்தபட்ச விண்ணப்பத்திற்கான வரம்பு £18,600 இலிருந்து £38,700 ஆக உயர்த்தப்படுகிறது. இதனால் "மக்கள் நிதி ரீதியாக ஆதரவளிக்கக் கூடியவர்களை மட்டுமே பிரித்தானியாவுக்கு அழைத்துவர முடியும்

இதேவேளை மாணவர் விசாக்களிலும் சில கட்டுப்பாடுகள் கடைப்பிடிக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை சட்டபூர்வ குடியேற்றவாசிகளை தவிர்த்து படகுகளில் பிரித்தானியாவுக்கு நுழைபவர்களின் வருகையையும் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார். (நி-5-6)

# ளை

# ரேல்



பகுதியின் ...ங்களிலும் ...வம் படை ..., ஹமாஸ் ...றுப்பினர் ...வடிக்கை ...றமை குறி (நி-5-6)

# பேருந்து விபத்தில் 14 பேர் உயிரிழப்பு

## தாய்லாந்தில் சோகம்

(பாங்கொக்)

தாய்லாந்தில் பேருந்து ஒன்று மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் 14 பேர் உயிரிழந்துள்ளனர்.

தாய்லாந்தின் பிரச்சாப் கிரிகான் மாகாணத்தில் நேற்று முன்தினம் நள்ளிரவில் பயணிகளை ஏற்றிச் சென்ற பேருந்து ஒன்று கட்டுப்பாட்டை இழந்து வீதியோரத்தில் உள்ள மரத்தின் மீது பயங்கரமாக மோதியதால் பேருந்தின் முன்பகுதி இரண்டாக பிளந்துள்ளது.

தகவல் அறிந்த மீட்புக்குழுவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று பேருந்தின் இடிபாடுகளில் சிக்கியவர்களை மீட்டனர். இந்த கோர விபத்தில் 14 பேர் உடல் நசுங்கி பலியாகியதோடு 20 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். காயமடைந்த அனைவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடத்தப்படுவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (5-6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரஞ்செடிகளை கிளை பிரித்தல் மனைத்தோட்டத்து இடரை தவிர்க்கும்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை,விவசாய பீடம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**


இம்முறை மழை எதிர்பார்த்ததை விட சிறியளவிலேயே இதுவரை கிடைத்திருக்கின்றது. நம் மூருக்கிள்ளேயே அங்கும் இங்குமாக பெய்து கொண்டிருந்த மழை பின்னர் பரந்துபட்டு பெய்திருந்தாலும் நெற்பயிர்களுக்கு போதுமானதாக்வும் சில இடங்களில் இன்னும் மழையை எதிர்பார்ப்பதாகவும் நடந்து முடிந்திருக்கின்றது. நகர்ப்புறங்களில் கிடைத்தவரை போதுமென்ற நிலையிலேயே மக்கள் அன்றாட நகர்வுகளை மேற்கொள்வதைப் பார்க்க முடிகின்றது. நீர் வழிந்தோடும் கால்வாய்களின் கட்டுமானம் பல இடங்களில் முழுமை பெறாமையாலும் இன்னும் ஆரம்பிக்கப்படாமையினாலும் இந்த நிலை பாதசாரிகளை பல இடங்களில் முகங் சுழிக்க வைத்திருக்கின்றது.

மக்கள் பிரதிநிதிகளை கொண்ட மக்கள் சபைகள் மக்களின் பாதுகாப்புக் கருதி மரங்கள் மற்றும் உயர்ந்து வளர்ந்த செடிகளை திறமை கொண்ட ஆளணியினை உருவாக்கி கிளைகளை கொய்வதற்கு ஏற்பாடு செய்யலாம். தொழில் தேடித் திரியும் உடல் வலிமையிருந்தும் பிச்சைக்காக ஏங்கும் மக்களை மதிப்புக் கொடுத்து அவர்களுக்கு மரஞ் செடிகளின் மேற்கிளைகளை கொய்யும் பயிற்சியை விவசாய திணைக்களத்தினால் கற்றுக் கொடுத்து அதனை அவர்களும் செய்து பார்த்து அவற்றுக்கான கருவிகளையும் கொடுத்து சபைகளின் அங்கீகாரத்துடன் இந்த கைங்கரியத்தைச் செய்யலாம்.

யாழ்ப்பாணத்திலிருக்கும் குடும்பங்களில் ஆளணியில்லாதவர்கள் அல்லது உதவியற்றவர்கள் இப்படியாராயினும் வருவார்களா என தேடிக் கொண்டிருக்கும் நிலையில் மக்களுக்கு நல்லது செய்வதற்காக அமைந்த சபைகள் இந்த விடயத்திலும் கரிசனை கொள்ளலாம். சில இடங்களில் ஒரு சில குழுக்கள் இவ்வாறான பெயர்களைச் சொல்லி மரக்கிளைகள் குறிப்பாக தென்னை நிமிர்த்துவது எனவும் கிளைகள் குருவிச்சை என்பன வெட்டுவதற்காகவும் கேட்டு அதற்கான கூலியாக பல ஆயிரங்களை கேட்டு முறைத்ததையும் அடம் பிடித்ததையும் கடந்த வருடங்களில் அனுபவப்பட்டதனால் இவ்வாறான இழிசெயல்களை ஊக்குவிக்காது எமது பிரதேசத்து பிரதேச மாநகரசபைகளூடாக ஒழுங்கமைக்கப்பட்ட விதத்தில் இந்த கிளைகொய்தலையும் செயற்படுத்தலாம்.

மாமரம் தொடர்ந்து அடர்த்தி யாக வளர்ச்சியடைந்தால் காய்ப்பது குறைந்துவிடும். ஆதலால் குறித்த பருவத்தில் இவ்வாறான கிளைகளை மழைவர முன்பே அகற்ற முடிந்தால் மரங்களும் அடர்மழையின் போது இலைப்பகுதி பாரங்கூடி சரிந்து விடாது பாதுகாப்பதுடன் நடுவில் கிளையகற்றல் மாமரங்கள் தொடர்ந்து அதிகமாக பூக்கவும்

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...



காய்க்கவும் செய்யும். சூரிய ஒளி இலைப் பரப்பினூடக மரங்களுக்குள் படவைத்தல் வேண்டும். இலைகள் நெருக்கமாகி அடர்த்தியாக இலையினுட்பரப்பிருந்தால் மாமரங்கள் சூரியஒளிபடும் பக்கமே பூத்து காய் உருவாகும். இங்கே மரக் கிளைகளை மரத்தின் தொடர் வளர்ச்சிக்கு விட்டு மீதியானவற்றை கத்தரிக்கலாம்.

இவற்றுடன் அநேகமான வீடுகளில் மாமரங்களில் குருவிச்சை என்னும் ஒட்டுண்ணித் தாவரம் வளர்ந்து அந்த மாமரத்திலுள்ள ஊட்டச்சத்தினை மாமரத்திலிருந்தே பெற்றுக்கொள்ளும். குருவிச்சை அடர்த்தியாக வளரத்தொடங்கி பூக்கும் காலம் வந்து காய்களை உருவாக்கும் போது அதனது காய்களிலுள்ள பசைத்தன்மையினால் பழங்கள் பறவைகளின் கால்களில் ஒற்றி அவை பறந்து சென்று வேறொரு தாவரத்தில் அமரும் போது இலகுவில் அங்கே பரப்பப் படுகின்றன. யாழ் குடாநாட்டிலுள்ள அநேகமான எமது பரம்பரை இனங்களான கறுத்தக் கொழும்பான், விலாட்டு ஆகிய மா மரங்களில் குருவிச்சை பிரச்சினை அதிகமாகவே காணப்படுகின்றது. இவ்வாறான குருவிச்சைகளை அவை மாமரத்தில் உருவாக்கிய கழலைகளுடன் அகற்றியே ஆக வேண்டும். குருவிச்சை முழுவதுமாக அகற்றாவிட்டால் நாளடைவில் மாமரம் நோயுற்றதாக சோபையிழந்து இறக்கும் நிலைக்கு வந்துவிடும். கிளைகளைக் கொய்கின்ற நேரத்தில் இவ்வாறான குருவிச்சைகளையும் சேர்த்தகற்றிவிட்டால் மாமரம் புதுப்பொலிவுடன் மீண்டும் அதிகளவில் பூத்துகாய்களைத் தரும்.

வீட்டுத் தோட்டம் வைத்திருப்பவர்கள் மழைக்காலத்தில் அதிகமாக வளர்ந்திருக்கும் பூக்கும் தாவரங்கள் அழகு தாவரங்களை கத்தரித்துக் கொள்வதுநல்லது. கத்தரிப்பதனால் செடி மற்றும் மரங்களுக்கு அவற்றின் இலைப் பரப்பைதாங்கும் வல்லமையையும் மழை அதிகமாயினும் வரட்சியாயினும் அவற்றுக் கேற்ப மரங்களை செடிகளை கத்தரித்து வளர்க்கலாம். மரங்கள் சரிந்து வீடுகளுக்கு மேலும் மதில்களுக்கு மேலும் இன்னும் வாகனங்கள் நிறுத்தி வைத்திருந்தால் அவற்றின் மேலும் விழுந்து பாரிய சேதத்தை ஏற்படுத்தும். நாம் அவதானமாக இதனை கையாண்டால் மரங்களினை இழப்பதை தவிர்க்கவும் அவற்றின் வினைத்திறனை அதிகரிக்கவும் கிளைபிரித்தல் அவசியமாகின்றது.

மரக்கிளைகளை மரத்தின் விசாலமான வளர்ச்சியை அனுசரித்து பிரித்து அகற்றுவது நல்லது. அகற்றிய அல்லது வெட்டிய இடங்களில் போடோ கலவை அல்லது செப்புசல் பேற்று கொண்ட பூஞ்சண நாசினியை பூசிவிடல் நல்லது. வெட்டிய பகுதிகளுக்கூடாக நோய்க் கிரு மிகள் மரத்தினுள் செல்லாது வெட்டுண்ட பகுதிகளை பரிகரித்துக்கொள்ளல் அவசியமானதாகும்.

குறிப்பாக இவ்வாறான மழைக்காலம் நுளம்புகள் அதிகமாக பெருகுகின்றதற்கு ஏதுவாக இருக்கின்றது. அதனால் வீட்டுத்தோட்டம் வைத்திருப்பவர்கள் நீர் தேங்கியிருக்கும் இடங்களான சிரட்டை, பிளாஸ்ரிக் போத்தல்கள்,பைகள் இவற்றை விட மழை நீர் தொடர்ந்து தேங்குவதற்கான வாய்ப்புக்களை இல்லாது செய்துவிட்டால் நுளம்புப் பெருக்கத்தை எமது வீடளவில் கட்டுப்படுத்திக் கொள்ளலாம். இவற்றை விட தாவரங்கள் வளர்க்கும் கொள்கலன்களில் நீர் தொடர்ந்து வடிந்தோடாமல் தேங்கி நிற்கத் தொடங்கினால் அதில் நுளம்பு விரைந்து பெருகிவிடும். நீர் தேங்கும் அனைத்து சிறிய பாவனைக்கில்லாத பொருட்களாயினும் அவற்றை முறையாக அகற்றாமல் கவன மற்று நாம் நடந்து கொண்டால் இறுதியில் நாமே எமக்கு மண்ணள்ளிப் போட்ட கதையா கிவிடும்.

அதிகமான நிழலும் பெரும் நன்மைதராது. மழைக்காலத்தில் அடாத்தியாக சடைத்து வளர்ந்த எந்த மரத்தினையும் மரம் சரிந்து போகாமல் நாற்புறமும் கிளைகளை கொய்து கொள்வது நல்லது. அதன் மூலம் அவற்றினை நாம் முறையாக பராமரித்துக் கொள்ளவும் முடியும். பழமரங்களாயின் அவற்றினை வெட்டுண்ட பகுதிகளில் அவசியம் செப்புசல்பேற்று கொண்ட பூஞ்சண நாசினி பரிகரிக்க வேண்டும். மேலும் வெட்டியமரங்களின் பகுதிகளை முறையாக அகற்றுதலும் அவசியமானதாகும்.


பாதை யோரங்களில் உள்ள மரங்களினையும் இவ்வாறு கொய்தல் மூலம் அகற்றி அவற்றினை பாதுகாக்கவும் அவற்றின் நிலையை உறுதி செய்யவும் முடியும். நாம் அனைவரும் முயற்சி செய்தால் மரங்கள் சரிந்து ஏற்படும் எந்த பாதிப்பிலிருந்தும் எம்மால் விடுபடமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நோய்த் தாக்கத்தால்

## பெரும்போக செய்கை பாதிப்பு

## விவசாயிகள் கவலை



(தருமபுரம்)

**பயிர்களுக்கு ஏற்பட்டுள்ள நோய்த் தாக்கங்கள் காரணமாக கிளிநொச்சி விவசாயிகள் பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளனர்.**

2023 ஆம் ஆண்டுக்கான பெரும்போக பயிர்ச்செய்கை கல்மடுகுளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன்போது மடிச்சுகட்டி மற்றும் கபில நிற தத்திநோய் பயிர்களை தாக்கியுள்ளதன் காரணமாக விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த பிரதேசத்தின் பல பகுதிகளிலும் ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றம் காரணமாக சடுதியாக குறித்த தாக்கம் அதிகரித்த வண்ணம் உள்ளது.

நோய்த் தாக்கத்திற்கு பல தடவைகள் கிருமிநாசினிகள் விசிறப்பட்டிருந்த போதிலும் எந்தவித பயனும் அற்ற நிலையில் பயிர்கள் வளர்ச்சி இன்றி அதேநிலையிலேயே காணப்படுவதாக கவலை தெரிவிக்கின்றனர்.

பல ஆயிரம் ரூபாய் செலவு செய்து கிருமிநாசினிகள் கொள்வனவு செய்து விசிறியும் உரிய பயனை பெற முடியாத நிலையில் விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுவதாக கவலை தெரிவித்துள்ளனர்.(நி-5-6-316)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
# பகிரங்க ஏலவிற்பனை அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகத்தில் காணப்படும் பாவனையில் இல்லாத அலுவலக தளபாடங்கள், கணனி உபகரணப்பொருட்கள் மற்றும் பாவிக்கமுடியாத/ பாவனைக்குத் தேவைப்படாத பொருட்களை பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே ஆர்வமுள்ள ஏலதாரர்கள் ஏலவிற்பனைக்குரிய பொருட்கள் தொடர்பான விபரங்களை பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக பொதுநிர்வாகக் கிளையுடன் (தொ.பே இல:021206 0180) தொடர்பு கொண்டு பின்வரும் தினங்களில் காலை 10.00 மணியிலிருந்து மாலை 02.00 மணிவரை குறித்த நாட்களில் பார்வையிடலாம்.

| இல | ஏலவிற்பனை நடைபெறும் இடம் | ஏலப்பொருட்கள் | ஏலப்பொருட்களை பார்வையிடும் நாட்கள் | ஏலவிற்பனை நடைபெறும் திகதி/ காலம் |
|---|---|---|---|---|
| 01 | பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகம் | • கணனி உபகரணப் பொருட்கள்<br>• தளபாடங்கள்<br>• ஆய்வுகூடப்பொருட்கள் | 11.12.2023<br>12.12.2023 | 14.12.2023<br>வியாழக்கிழமை<br>மு.ப. 10.00 மணி |

ஏலவிற்பனையில் பங்குபற்ற விரும்புபவர்கள் மீளளிக்கப்படாத அனுமதிக் கட்டணமாக ***ரூபா 2000.00ஐ*** யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையில் ***97000060000276*** என்ற கணக்கிலக்கத்திற்கு நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயரில் வைப்புச்செய்த பற்றுச்சீட்டுடன் ஏலப்பொருட்களை பார்வையிடலாம்.

ஏலத்தில் கலந்து கொள்ளும் ஏலதாரர்கள் பொருட்களைப் பார்வையிட்ட பின்னர் மீளளிப்பு செய்யக்கூடிய வைப்புத் தொகையாக ரூபாய் 15,000.00ஐ யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையில் ***97000440002612*** என்ற கணக்கிலக்கத்திற்கு வைப்புச் செய்து செலுத்திய பற்றுச்சீட்டினை 12.12.2023 மாலை 4.00 மணிக்கு முன்னர் கிளிநொச்சி வளாக பொதுநிர்வாகக்கிளையில் சமர்ப்பித்து விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்து மேற்குறித்த ஏலவிற்பனையில் கலந்து கொள்ளமுடியும்.

மேற்காட்டிய திகதியில் நடைபெறும் ஏலவிற்பனையில் வெற்றியடைந்தவர்கள் ஏலத்திற்குரிய தொகையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக்கிளையில் ***97000440001846*** என்ற கணக்கிலக்கத்திற்கு பணமாக உடன் செலுத்தி குறித்தொதுக்கப்பட்ட தினங்களுக்குள் பொருட்களை முழுமையாக அகற்றுதல் வேண்டும்.

**பதிவாளர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
06.12.2023

(சி-7812)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2981


பிரசாந்




ராஜ்




சாந்தன்




தயா




றெஜினோல்ட்




மது




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 2

காவியத் தொடர்

346





கூறினான்.

"நல்ல வரவேற்பு!" என்றாள் குந்தவை.

"அதோடு புலிகளுக்கு இரை போடும் சமயம் நெருங்கி விட்டது. இரையை நினைத்து உறுமுகின்றன."

"அப்படியானால் நாம் சீக்கிரம் போய்விடலாம். சிறையின் வாசல் எங்கேயிருக்கிறது?"

மண்டபத்தின் ஒரு மூலைக்கு இதற்குள் அவர்கள் வந்திருந்தார்கள். அங்கிருந்த புலிக் கூண்டு ஒன்றைக் காவலர்கள் அப்பால் நகர்த்தினார்கள். அங்கே தரையில் பதித்திருந்த கதவு ஒன்று காணப்பட்டது. இரண்டு ஆட்கள் குனிந்து கதவை வெளிப்புறமாகத் திறந்தார்கள். உள்ளே சில படிக்கட்டுகள் காணப்பட்டன. அவற்றின் வழியாக ஒவ்வொருவராக இறங்கிச் சென்றார்கள். இருள் அதிகமாயிற்று. இரு சேவகர்கள் பிடித்திருந்த இரண்டு தீவர்த்திகளிலிருந்து புகையினால் மங்கிய வெளிச்சம் வந்து கொண்டிருந்தது. குறுக்கும் நெடுக்குமாகச் சென்ற குறுகிய பாதைகளின் வழியாக அவர்கள் ஒற்றை வரிசையில் போக வேண்டியிருந்தது.

அங்கே புலிகளின் பயங்கர உறுமல் ரோமம் சிலிர்க்கச் செய்தது என்றால் இங்கே நாலுபுறத்திலும் எழுந்த தீனமான, சோகமயமான மனிதக் குரல்கள் உள்ளம் பதறி உடல் நடுங்கச் செய்தன.

ஆனால் அந்தத் தீனக்குரல்களுக்கு மத்தியில், விந்தை! விந்தை! ஓர் இனிய குரல் இசைத்ததும் கேட்டது!

"பொன்னார் மேனியனே! புலித்தோலை அரைக்கசைத்து

மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை அணிந்தவனே!"

அந்தப் பாதாளச் சிறையில் இருந்த அறைகள் ஒரு வரிசையாக இல்லை. முன்னும் பின்னும் கோணலும் மாணலுமாக இருந்தன. ஒவ்வொரு அறை வாசலிலும் சென்று காவலன் தீவர்த்தியை உயர்த்திப் பிடித்தான். சில அறைகளில் உள்ளே ஒருவனே இருந்தான். சிலவற்றில் இருவர் இருந்தார்கள். சில அறைகளில் இருந்தவர்களைச் சுவரில் அடித்திருந்த ஆணி வளையத்தில் சேர்த்துச் சங்கிலியால் கட்டியிருந்தது. சில அறைகளில் அவ்விதம் கட்டாமல் சுயேச்சையாக விடப்பட்டிருந்தார்கள். ஒவ்வொரு அறையிலும் இருந்தவர்களின் முகம் தெரிந்ததும் குந்தவைதேவி தலையை அசைக்க எல்லோரும் மேலே சென்றார்கள்.

நடுவில் ஒரு சமயம் வானதி, "இது என்ன கொடுமை? இவர்களை எதற்காக இப்படி அடைத்திருக்கிறது? நீதி விசாரணை ஒன்றும் கிடையாதா?" என்று கேட்டாள்.

அதற்குக் குந்தவை, 'சாதாரண குற்றங்களுக்கு நீதி விசாரணை எல்லாம் உண்டு. ஆனால் இராஜாங்கத்துக்கு எதிராகச் சதி செய்தவர்கள், வெளிநாட்டு ஒற்றர்கள், ஒற்றர்களுக்கு உதவியவர்கள் இவர்களைத்தான் இங்கே போடுவார்கள். அவர்களிடமிருந்து தெரியவேண்டிய உண்மை தெரிந்து விட்டால் வெளியே விட்டுவிடுவார்கள். ஆனால் சிலரிடமிருந்து உண்மை ஒன்றும் தெரிவதில்லை. ஏதாவது இருந்தால்தானே சொல்லுவார்கள்? அவர்கள் பாடு கஷ்டந்தான்." என்றாள்.

இதற்குள்ளாக, "பொன்னார் மேனியனே!" பாட்டு மிகச் சமீபத்தில் கேட்கத் தொடங்கியிருந்தது.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## யாருக்கு மரணதண்டனை

அன்றும் வழக்கம் போல் தர்பார் கூடியிருக்க, அக்பர் சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கையில் அவருடைய பணியாள் ஒருவன் ஒரு கூண்டுக் கிளியை அங்கு கொண்டுவந்து வைத்தான். கூண்டினுள்ளிருந்த பச்சைக்கிளி சிறகுகளை அடித்துக் கொண்டு 'கீ' 'கீ' என்று கத்தியது. அந்தக் கிளியை அன்புடன் பார்த்துக் கொண்டு இருந்த அக்பர், பின்னர் சபையோர் பக்கம் திரும்பி, "என்னுடைய நெருங்கிய நண்பன் இந்தக் கிளியை எனக்குப் பரிசாக அளித்திருக்கிறான். இந்தக் கிளி அழகாக இருக்கிறதல்லவா?" என்று கேட்டார்.



"ஆம், பிரபு! நானும் எத்தனையோ? கிளிகளைப் பார்த்திருக்கிறேன். ஆனால், உங்களுடைய கிளியைப் போன்ற அழகான கிளியை இதுவரை நான் பார்த்ததில்லை" என்றார் தர்பாரில் இருந்த அக்பரின் அதிகாரிகளில் ஒருவரான ஃபயிஸ்கான்!

உடனே அவர் பக்கம் பார்வையைத் திருப்பிய அக்பர், "உனக்குக் கிளிகளைப் பற்றி தெரியுமா? எப்போதாவது கிளி வளர்த்தது உண்டா?" என்று கேட்டார்.

"இன்று வரை நான் பதினைந்திற்கு மேற்பட்ட கிளிகளை வீட்டில் வளர்த்து இருக்கிறேன். ஆனால் அவற்றை விட உங்களுடைய கிளி மிகவும் அழகாக இருக்கிறது" என்றான் ஃபயிஸ்கான். இவ்வாறு சொல்லி அக்பரின் மனத்தைக் குளிரச் செய்ய முயன்றான்!

"மிகவும் நல்லதாகப் போயிற்று. உன்னை மாதிரி கிளி வளர்ப்பதில் அனுபவமுள்ள ஒருவனைத்தான் நான் தேடிக் கொண்டிருந்தேன். இதை வளர்க்கும் பொறுப்பை உன்னிடம் தர விரும்புகிறேன். இதை நீ உன் வீட்டுக்கு எடுத்துச் செல்! ஆனால் ஒன்றை நினைவில் வைத்துக் கொள்! இந்தக்கிளி இறந்துவிட்டதாக எவன் செய்தி சொல்கிறானே?, அவனுக்கு மரணதண்டனை விதிப்பேன்!" என்று சொல்லி கிளிக் கூண்டை அவன் கையில் தந்தார்.

அதைக்கேட்டு ஃபயிஸ் கானுக்குத் தூக்கி வாரிப் போட்டது. அவன் மனத்திற்குள் தன்னைத் திட்டிக் கொண்டே "பிரபு! என்னிடம் ஒப்படைத்துள்ள பொறுப்பை நான் மனமுவந்து ஏற்கிறேன்" என்று மிகவும் மகிழ்ச்சியுற்றவன் போல் அவரை வணங்கி எழுந்தான்.

பின்னர் அவன் கிளிக் கூண்டை வீட்டுக்கு எடுத்துச் சென்றான். ஏற்கெனவே சிடுசிடுவென்றிருந்த அவன் மனைவி கிளிக்கூண்டைப் பார்த்து "இது ஏது? எதற்காக இதைப் போய் வீட்டுக்கு எடுத்து வந்தாய்?" என்றாள். "இதை நம் வீட்டில் வைத்து பாலூட்டி வளர்க்க வேண்டும்" என்றான் ஃபயிஸ்கான். "சரிதான்! யார் இதை வளர்ப்பது?" என்று கேட்டதற்கு, "நீதான்!" என்று ஃபயிஸ்கான் கூறியதும், அவளுக்குக் கோபம் பற்றிக் கொண்டு வந்தது. பின்னர் ஒரு கணம் நிதானித்து, "இதை சக்கரவர்த்தி உனக்குப் பரிசாக அளித்தாரா?" என்று கேட்டாள்.

அதற்கு 'ஆமாம்' என்று அவன் தலையாட்டினான். "வேறு யாரிடமாவது இதைக் கொடுத்துவிடு!" என்று அவள் அலட்சியமாகச் சொல்ல, "இதை வேறு யாரிடமும் கொடுக்க முடியாத நிலையில் இருக்கிறேன்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையை உறுதியாகக் கடைப்பிடிப்பதில் இருந்துதான் வலிமை எல்லாம் கிடைக்கிறது.
- காந்திஜி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சீர்திருத்தப் பள்ளியில் நடந்த கொடூரம்

மட்டக்களப்பு கொக்குவில் பகுதியைச் சேர்ந்த 14 வயதுச் சிறுவன் ஒருவன் சிறுவர் நன்னடத்தைப் பிரிவில் ஒப்படைக்கப்பட்ட நிலையில் அடித்துக் கொலை செய்யப்பட்ட சம்பவம் மனித மனங்களை ரணமாக்கியுள்ளது.

ஆலயமொன்றில் திருடியதான குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட பிரஸ்தாப சிறுவனைப் பொலிஸார் நீதிமன்றில் முற்படுத்தினர்.

நீதிமன்றம் அச்சிறுவனை சிறுவர் நன்னடத்தை சீர்திருத்தப் பள்ளியில் ஒப்படைக்குமாறு கட்டளையிட்டது.

இவ்வாறு சிறுவர் சீர்திருத்தப் பள்ளியில் ஒப்படைக்கப்பட்ட அந்தச் சிறுவனை அங்கு பணிபுரியும் பெண்ணொருவர் கண்டபாட்டில் தாக்கியதில் அந்தச் சிறுவன் உயிரிழந்துள்ளான்.

14 வயதுச் சிறுவன் ஆலயமொன்றில் திருடினான் என்றால், அதற்குக் காரணம் இந்தச் சமூகம் என்பது முதற்கண் புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

வீடு, பாடசாலை, ஊர் என்ற கட்டமைப்புகள் சரியானதைக் கற்றுக் கொடுக்காததன் காரணமாக, அந்தச் சிறுவன் திருட வேண்டிய பரிதாப நிலைக்கு ஆளாகியுள்ளான்.

தவிர, அறியாப் பருவம். திருட்டின் விளைவு பற்றி இம்மியும் சிந்திக்காத அந்தச் சிறுவன் தெரியாத்தனமாகத் திருடியதன் காரணமாக சீர்திருத்தப் பள்ளியில் சேர்க்கப்பட்ட துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டது.

இவ்வாறு சீர்திருத்தப்பள்ளியில் சேர்க்கப்படுகின்ற சிறுவர்களுக்கு நல்ல பழக்கவழக்கங்களைக் கற்றுக் கொடுத்து, அவர்களைச் சீர்படுத்தி நல்ல வண்ணம் வாழ்வதற்கான வழிவகைகளைச் செய்வதுதான் சீர்திருத்தப் பள்ளிகளின் கடமையும் பணியுமாகும்.

ஆனால் குறித்த சிறுவன் சீர்திருத்தப் பள்ளிப் பெண் பணியாளரால் அடித்து சாகடிக்கப்பட்டுள்ளான் எனில், பிரஸ்தாப சிறுவர் நன்னடத்தைச் சீர்திருத்தப் பள்ளி நிர்வாகம் எப்படியாக இயங்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

ஆம், நீதிமன்றத்தின் கட்டளைப்படி சீர்திருத்தப் பள்ளியில் சேர்க்கப்பட்ட சிறுவனுக்கு இவ்வாறானதொரு கதி ஏற்பட்டதெனில், அதுபற்றி மனித சமூகம் ஒரு கணம் சிந்திக்க வேண்டும்.

அதேநேரம் குறித்த சிறுவர் நன்னடத்தைச் சீர்திருத்தப் பள்ளி நிர்வாகம் இதுவரையில் கண்காணிக்கப்படவில்லை என்பதும் அங்கு நடக்கின்ற மோசமான சிறுவர் வதை குறித்து எவரும் கருசனை கொள்ளவில்லை என்பதையும் ஏற்றுத்தானாக வேண்டும்.

எனவே குற்றச்செயல்களில் ஈடுபட்ட சிறுவர்களை சீர்திருத்துவதற்காக அமையப்பெற்ற அமைப்புகளில் மனிதர்கள் கடமையாற்றாவிடில், நிலைமை மோசமாகும் என்பதற்கு மட்டக்களப்புச் சம்பவம் நல்லதொரு எடுத்துக்காட்டு.

ஆக, இனிமேலேனும் இவ்வாறான துயரச் சம்பவங்கள் நடைபெறாமல் இருப்பதை நீதிபரிபாலனமும் உறுதி செய்ய வேண்டும்.

தவிர, இத்தகைய சிறுவர் சீர்திருத்தப் பள்ளிகளுக்கு ஆன்மீகத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள், நீதிபரிபாலனத்தினர், சமூக அமைப்புச் சார்ந்தவர்கள், இடையிடையே சென்று அவர்களைப் பார்வையிடுவது, அவர்களுடன் கதைப்பது, அவர்களுக்கு அறிவுரை வழங்குவது என்ற செயற்பாட்டை மேற்கொள்ள வேண்டும்.

இத்தகைய செயற்பாடுகள் பயனுறுதிமிக்கதாக அமையும்என்பதுடன் அதனூடுகுறித்த சிறுவர்களின் நலன்களும் பாதுக்காக்கப்படும்.

ஆகையால் இதுபற்றி மக்கள் சமூகம் கருசனை கொள்ள வேண்டும்.

# 18 வயதிலேயே பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்பு கிடைக்கும்

## கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த

(கொழும்பு)

உத்தேச கல்விச் சீர்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டால் இந்நாட்டின் பிள்ளைகள் 18 வயதிலேயே பல்கலைக்கழகம் செல்லும் சந்தர்ப்பம் கிடைக்கும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று கல்வி அமைச்சு தொடர்பான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உத்தேச கல்வி சீர்திருத்தங்களின் படி, இந்நாட்டு மாணவர்கள் 21 வயதிற்குள் பல்கலைக்கழக பட்டம் பெறும் வாய்ப்பைப்பெறுவார்கள்என்றார்.

க.பொ.த சாதாரண தர பரீட்சை மற்றும் புலமைப் பரிசில் பரீட்சைகளிலும் மாற்றங்கள் முன்மொழியப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (ம-7)

### தாக்குதலுக்கு இலக்கான

## 14 வயது சிறுமி வைத்தியசாலையில்

(யாழ்ப்பாணம்)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மந்துவில் பிரதேசத்தைச் சேர்ந்த 14 வயதுச் சிறுமி ஒருவர் தாக்குதலுக்கு இலக்காகி பாதிக்கப்பட்ட நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேற்படி சிறுமி மத ஸ்தாபனத்தில் இடம்பெற்ற வகுப்பிற்கு செல்லவில்லை என்ற காரணத்தாலேயே மதகுரு அவரை கடுமையாக தாக்கியதுடன் உள ரீதியாகவும் பாதிப்பிற்கு உள்ளாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக சிறுமி வைத்தியசாலையில் தனது முறைப்பாட்டைப் பதிவு செய்துள்ள நிலையில் மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,30)

### பாதுகாப்பு உத்தியோகத்தரை தாக்கிய

## 4 களனி பல்கலைக்கழக மாணவர்கள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

களனி பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பு உத்தியோகத்தரை தாக்கிய சம்பவம் தொடர்பில் 4 பல்கலைக்கழக மாணவர்கள் இடைநிறுத்தப்பட்டுள்ளனர்.

மேலும் இந்த சம்பவம் குறித்து விசாரணைகளை நடத்துவதற்கு 2 குழுக்கள் நியமிக்கப்படும் என பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்துள்ளது.

களனி பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடம் தவிர்ந்த ஏனைய அனைத்து பீடங்களும் நேற்று முதல் மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளன.

குறித்த பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தாக்கப்பட்டதை அடுத்து, இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக பல்கலைக்கழக நிர்வாகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான விசாரணைகள் நிறைவடையும் வரையில், மருத்துவ பீடம் தவிர்ந்த ஏனைய அனைத்து பீடங்களையும் மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.(ம-7)

## மட்டக்களப்பில் ஐஸ் போதைப்பொருள் விற்பனை செய்தவர் கைது

மட்டக்களப்பு வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள அரபாநகர் பிரதேசத்தில் ஐஸ் போதை பொருள் வியாபாரத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வியாபாரிஒருவரை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து அரபாநகர் பகுதி வீதியில் கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது குறித்த வீதி வழியாக வியாபாரத்துக்காக ஐஸ் போதை பொருளை எடுத்துச் சென்ற வியாபாரியை மடிக்கிபிடித்து கைது செய்ததுடன் அவரிடமிருந்து 9 கிராமும் 9 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும் மீட்கப்பட்டுள்ளது. (ம-7)

### நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு இடையூறு

## கைதான பொலிஸார் பிணையில் விடுதலை

நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்திய சிவில் உடையில் இருந்த பொலிஸார் ஒருவரை ஒரு இலட்சம் ரூபாய் ஆள்பிணையில் விடுவித்த பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் கிருசாந்தன் பொன்னுத்துரை வழக்கை அடுத்த வருடம் இரண்டாம் மாதம் 22 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார்.

பருத்தித்துறை நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வழக்கு நடைபெற்றுக் கொண்டிருந்த போது, வழக்கு ஒன்றிற்காக வந்திருந்த இளைஞருடன் வந்திருந்த மாளிகாவத்தை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸார் ஒருவர் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்திய நிலையில் கைது செய்யப்பட்டு ஒரு நாள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

நேற்று செவ்வாய்க்கிழமை மீண்டும் இவ்வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது சிவில் உடையில் இருந்த பொலிஸாரை ஒரு இலட்சம் ரூபாய் ஆள் பிணையில் விடுவித்த நீதான் வழக்கை அடுத்த வருடம் இரண்டாம் மாதம் 22ஆம் திகதிக்கு வழக்கை ஒத்திவைத்தார்.

(ம-7,60)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை யாழ். பிரதேசத்தில்** சீனோர் படகுத்துறை-காரைநகர், கடற்படைத்தளம்-காரைநகர், காரைநகர் கடற்படை முகாம், இ.போ.ச டிப்போ-காரைநகர், களபூமி, பாலக்காடு அம்மன் கோவிலடி-காரைநகர், தோப்புக்காடு-காரைநகர், ஊரி-காரைநகர் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** அரசன் அரிசி ஆலை, அளுத்வத்த, போகஸ்வேவா, மாமடுவகிராமம், மகாகச்சக்கொடிய, மல்மடுவா (மகாகச்சக்கொடிய), நாமல்கம, நந்திமித்திரகம, பிரப்பன்மடு, சலலிங்கம ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படும்.

பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு - 2023
16 Days of Activism against Gender Based Violence
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

"குடும்பங்களில் அன்புதனைப் பகிர்ந்திடுவோம்...
அகம் தன்னில் அன்பால் மகிழ்ந்திடுவோம்...
அன்பின் வாசனை பரப்பிடுவோம்... அகிலமெங்கும்
அகன்றிடும் வன்முறை இப்போதே...!"

JSAC
16 2023
யாழ் சமூக செயற்பாட்டு மையம் | Jaffna Social Action Center (JSAC)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழலும் புதிய ஊழல் தடுப்புச் சட்டமும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன?



08

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

ஆனாலும் குறித்த ஒரு நபர் அறியாமல் அல்லது தவிர்க்க முடியாத நிர்ப்பந்தம் காரணமாக இலஞ்சம் கொடுத்துவிட்டு அது தொடர்பில் உடனடியாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்வார் எனில் அவரை சட்டம் குற்றவாளியாக அன்றி இலஞ்சம் கேட்ட அதிகாரியின் சூழ்ச்சியால் அந்த சந்தர்ப்பத்தில் சிக்குப்பட்ட ஒரு அப்பாவியாகவே கருதும்.

எனினும், இலஞ்சம் கொடுப்பதும் குற்றமாகும் எனத் தெரிந்து வைத்துள்ள நாம், ஒருவர் இலஞ்சம் கேட்கும் போது அதைக் கொடுப்பதற்கு முன்பாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்ய வேண்டும் என்றே சட்டம் பெரிதும் வலியுறுத்துகின்றது. இலஞ்ச மற்றும் ஊழல் குற்றங்களுக்கு நமது நாட்டுச் சட்டம் கடுமையான தண்டனைகளை வரையறுத்துக் கூறியுள்ளது.

இலஞ்சத்தைப் பரிந்து கேட்டல், ஏற்றுக் கொள்தல், கொடுத்தல் அல்லது இதில் ஏதும் ஒன்றைச் செய்ய எத்தனித்தல், சூழ்ச்சி செய்தல் அல்லது ஆணை வழங்குதல் போன்ற குற்றங்களுக்கு ஒருவர் குற்றவாளியானால், அவருக்கு 7 ஆண்டுகளுக்கு மேற்படாத சிறைத்தண்டனையுடன் ரூபா 5000/= இற்கு மேற்படாத தண்டப் பணமும் விதிக்கப்படும்.

அத்துடன் நின்றுவிடாது, இலஞ்சத்திற்காக பரிமாற்றஞ் செய்யப்பட்ட அவாநிறைவொன்றின் (பணம் அல்லது பொருள் அல்லது பணத்தால் அளவிட முடியாத ஏனைய விடயங்கள்) பெறுமதிக்கு சமமான தொகையும் தண்டப் பணமாக அறவிடப்படும்.

அதேவேளை, ஏதேனுமோர் ஆதனம் இலஞ்சத்தின் மூலம் பெற்றுக் கொண்டதாக நிரூபிக்கப்படும் போது மேற்படி தண்டனைகளுக்கு மேலதிகமாக இலஞ்சத்தால் பெற்றுக் கொண்டதாக தீர்மானம் செய்யப்பட்ட ஆதனத்தின் பெறுமதிக்குக் குறையாத அல்லது அதன் மும்மடங்கிற்கு மேற்படாத தொகை தண்டப்பணமாக தீர்க்கப்படும் அல்லது குறிப்பிட்ட ஆதனம் அரசுடைமையாக்கப்படும்.

மேலும், ஒருவர் ஊழல் குற்றமொன்றுக்கு குற்றவாளியாக்கப்படின் 10 ஆண்டுகளுக்கு குறையாத காலத்திற்குச் சிறைத்தண்டனை அல்லது ஒரு இலட்சம் ரூபாவுக்கு மேற்படாத தண்டப்பணம் அல்லது மேற்கூறிய இரண்டும் தண்டனைகளாக வழங்கப்பட வேண்டும் என சட்டம் வலியுறுத்துகின்றது.

இத்தண்டனைகளுக்கு மேலதிகமாக குற்றச் செயலின் தன்மைக்கு ஏற்ப குற்றவாளி தனது தொழிலை அல்லது பதவியை இழக்க நேரிடுவதோடு ஓய்வூதியம், பணிக்கொடை போன்றவற்றுக்கான உரித்தும் அவருக்கு இரத்துச் செய்யப்படும். அத்தோடு அவர் பாராளுமன்றத் தேர்தல் எனின் 7 ஆண்டுகளுக்கும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எனில் 5 ஆண்டுகளுக்கும் வாக்காளராக பதிவு செய்வதற்கு, வாக்களிப்பதற்கு, தெரிவு செய்யப்படுவதற்கு உரிய தகைமைகளை இழக்க வேண்டியும் ஏற்படலாம்.

அத்தோடு, அரசின் அல்லது இலஞ்ச சட்டத்தின் கீழ் பட்டியல் படுத்தப்பட்ட நிறுவனங்களில் தொழில் ஒன்றை அல்லது பதவியைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பையும் அவர் முற்றுமுழுதாக இழக்க வேண்டி ஏற்படும்.

### இலங்கை மோசடி தடுப்பு கட்டளைச் சட்டம் இல 7. 1840

இலங்கை மோசடி தடுப்பு கட்டளைச் சட்டம் ( Prevention of Frauds Ordinance) காலத்தால் முந்தியதும் ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் இயற்றப்பட்ட சட்டமுமாகும். இது போலியான ஆவண தயாரிப்பு மற்றும் சொத்துக்களுடன் தொடர்புடைய மோசடிகளை கையாள்வதை நோக்காகக் கொண்டது. இதில் வகையிடப்பட்ட சில குற்றங்களிற்கு நீதிமன்ற பிடியாணை இன்றி பொலிஸாருக்கு குற்றவாளிகளை கைது செய்யும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### சொத்துக்கள் பொறுப்புக்களை வெளிப்படுத்தும் சட்டம் இல.1 1975

இச்சட்டம் பொதுவாக அரசியல் வாதிகளையும் அரச உயர் வருமானம் பெறும் அதிகாரிகளையும் தனது பரம்பெல்லையினுள் உள்ளடக்கிய சட்டமாகும். இச்சட்டத்தின் படி உள்ளூராட்சி சபை, மாகாண சபை மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களிற்கு வேட்பாளராக விரும்புவோரும் தெரிவு செய்யப்பட்டோரும் அரச நிறைவேற்று செயற்குழு தர உத்தியோகத்தர்களும் தமது முழுச் சொத்து பற்றிய அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.

அதன் பின்பு ஐந்து வருடங்களிற்கு ஒரு தடவை அவ்வறிக்கை இயற்றப்படுத்தப்பட வேண்டும். இச்சட்டத்தின் கீழ் போலியான விபரத்தை வெளிப்படுத்தல் மற்றும் போலியான விபரத்தை வழங்கல் என்பன தண்டனைக்கு உரிய குற்றங்களாகும். பொதுவாக 1975 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க சொத்துக்கள் பொறுப்புக்கள் வெளிப்படுத்தல் சட்டத்தில் குற்றங்களாக பின்வருவன முன்வைக்கப்பட்டுள்ளன.

ஒரு நபர் வருடாந்தம் சொத்துக்கள், பொறுப்புக்கள் தொடர்பான வெளிப்படுத்தலை வழங்க தவறுவது, பிழையான தகவல்களை வழங்குவது, வேண்டுமென்றே தகவல்களை மறைப்பது, இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சாரத்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவினால் வேண்டப்படுமிடத்து தகவல்களை வழங்கத் தவறுதல் ஆகியன சட்டத்தின்படி குற்றமாகும்.

நீதிவான் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் நடைபெறும் வழக்கொன்றினால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டால் ரூபா 1000.00 அதிகமில்லாத தண்டப்பணம் அல்லது ஒரு வருடத்திற்கு அதிகரிக்காத சிறைத் தண்டனை அல்லது இரண்டும் சேர்த்து வழங்கப்படும்.

### பொதுச்சொத்துக்கள் தொடர்பான குற்றங்கள் சட்டம் இல.12, 1982

இச்சட்டம் அரச உடைமை சொத்துக்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதைத் தடை செய்யும் முகமாக அறிமுகம் செய்யப்பட்டது. இச்சட்டத்தின் கீழ் அரச நிதியை சுயலாபத்திற்காகக் கையாளல் செய்வது மற்றும் அரச சொத்துக்களைச் சுயலாபத்திற்காக முறை தவறி பயன்படுத்துவது என்பன தண்டனைக்குரிய குற்றங்களாக வகையிடப்பட்டுள்ளன.

### நிதி மோசடி தடுப்புச் சட்டம் இல.5,2005

இச்சட்டம் இலத்திரனியல் யுகத்தின் வேகத்தோடு சட்டத்தைச் சமாந்தரமாக்க எடுத்த முயற்சி என்பதற்கும் எடுத்துக்காட்டாகும். இச்சட்டம் சட்டவிரோதமாகச் சம்பாதித்த பணத்தை (கறுப்புப் பணம்) பரிமாற்றங்களிற்கு (வெள்ளைப் பணமாக மாற்றல்) உட்படுத்துவதைத் தடை செய்கின்றது.

### தகவல் அறியும் உரிமைச் சட்டம் இல 12, 2016

பொதுமக்கள் தகவல்களை அணுகிக் கொள்வதனை ஒழுங்குபடுத்தும் முகமாக 2016ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க தகவல் அறியும் சட்டம் இயற்றப்பட்டது. இந்த சட்டம் 2016 ஜூன் 24ஆம் திகதி பாராளுமன்றத்தால் கொண்டுவரப்பட்டது. 2017 பெப்ரவரி 03ஆம் திகதி முதல் செயற்படும் வகையில் அமைச்சுக்கள் / அரச அதிகார சபைகள் சார்பில் இந்தச் சட்டம் செயற்படுத்தப்பட்டது.

இந்தச் சட்டத்தின் பிரகாரம், தகவல் அறியும் உரிமைக்கான கோரிக்கைகளுக்கு அரசாங்க நிறுவனங்கள் 14 நாட்களுக்குள்ளும் விஷேட ஏற்பாடுகளுக்கு அமைய சில சந்தர்ப்பங்களில் அதிகபட்சம் நீடிக்கப்பட்ட 21 நாட்களுக்குள்ளும் பதிலளித்தல் வேண்டும்.

இந்த சட்டத்திற்கு அமைவாக, ஏதேனும் தகவல்களை பெறுவதற்காக இந்த படிவத்தைப் பூர்த்தி செய்வது என்பது கட்டாயமானதல்ல என்பதுடன் தேவையான தகவல்களை அடையாளங்கண்டு கொள்வதற்கு போதுமான தகவல்களுடன் கூடிய ஏதேனும் எழுத்து மூலமான கடிதம், மின்னஞ்சல் அல்லது வாய்வழி கோரிக்கைகளும் போதுமானது.

பல்வேறு சந்தர்ப்பங்களில் பிரஜைகள் ஊழலை எதிர்த்து நிற்பதற்கும் ஊழல்களை ஆதாரபூர்வமாக வெளிப்படுத்துவதற்கும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் பெரிதும் பயன்படுகின்றது. இச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதிலும் பிரஜைகள் தகவல்களை பெற்றுக்கொள்வதற்கும் தகவல் அறியும் உரிமைச்சட்ட ஆணைக்குழுவின் பங்கு மிகவும் முக்கியமானது. ஆணைக்குழுவானது பிரஜைகளுக்கான தகவல் உரிமையை உறுதி செய்கின்ற அதே வேளையில் பொது அதிகாரசபைகள் தகவல் அதிகாரிகள் தகவல்களை பூரண சுதந்திரத்துடன் கையாள்வதையும் உறுதி செய்கின்றனர்.

சில சமயங்களில் தகவல் அறியும் சட்டத்தை உபயோகித்து பிரஜைகள் தகவல்களை கோருகின்ற சந்தர்ப்பங்களில் தகவலதிகாரிகள் தகவல்களை வழங்குவதில் சில சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். அதாவது, மேலதிகாரிகளின் அழுத்தம், தகவலை வழங்க விடாமல் தடுத்தல் போன்ற காரணங்களால் தகவலதிகாரிகளால் தகவல்களை வழங்க முடியாதிருந்தது. அவ்வாறான வேளைகளில் தகவலதிகாரிகள் ஆணைக்குழுவின் உதவியை நாடிய வேளையில் தகவலதிகாரிகளுக்கு தகவல்களை கையாள பூரண சுதந்திரம் இருப்பதை ஆணைக்குழு மீள உறுதி செய்கின்றது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்விக்கான...

தாரத்தின் மத்தியிலும் ஒரு நாடு என்ற வகையில் கல்வியை மேம்படுத்து வதற்கு இவ்வாறான கவனம் செலுத்து வது தொடர்பில் அமைச்சர் என்ற வகையில் மகிழ்ச்சியடைவதாக கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேம ஜயந்த தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம் பெற்ற கல்விச் செலவு தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரை யாற்றும்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

2023ஆம் ஆண்டு கல்விக்கான தொகை 466.276 பில்லியன் ரூபாயாகும் எனவும் இந்த வருட வரவு செலவுத் திட்டத்தில் கல்விக்காக 517.05 பில்லி யன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் இது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகை யில் 55 பில்லியன் ரூபாய் அதிகரிப்பு எனவும் அமைச்சர் மேலும் சுட்டிக் காட்டினார். (ம-7)

## டிஜிட்டல்...

டல் பிறப்பு சான்றிதழ் வேலைத்திட்டம் ஏனைய மாவட்டங்களுக்கும் துரிதமாக விரிவுபடுத்தப்படும் என உள்நாட்ட லுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தெரிவித்துள்ளார்.

டிஜிட்டல் தொழில் நுட்பத்துடன் சர்வதேச தரத்திற்கமைய இந்த தேசிய பிறப்புச் சான்றிதழுக்கு வழங்கப்படும் இலக்கமானது தேசிய அடையாள அட்டை இலக்கங்களாக மாற்றப்படும் என இராஜாங்க அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## ஐ.தே.கவுடன்...

தெரிவிக்கையில்,

"அடுத்த வருடம் தேர்தல் ஒன்று நடத்தப்பட்டால் கட்சி என்ற ரீதியில் நாங்கள் அதற்கு தயாராகவே இருக் கின்றோம்.

வெற்றிபெறும் வேட்பாளர் ஒருவரை எங்கள் கட்சி சார்பில் நாங்கள் முன் நிறுத்துவோம். வேட்பாளராக நிறை யப் பேர் இருக்கின்றார்கள். அதிக எதிர் பார்ப்பும் காணப்படுகின்றது.

விவசாயிகள், வியாபாரிகள், அரசி யல்வாதிகள் ஜனாதிபதிகள் எனப் பலர் எமது கட்சியுடன் இணைந்து இருக்கின்றார்கள்.

தற்போதுள்ள ஜனாதிபதியை எதிர் வரும் தேர்தல் வரையில் ஜனாதிபதி யாக நாங்கள் நியமித்தோம்.

ஆனால் எதிர்காலத்தில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து பய ணிப்போமா? என்பது பற்றி தெளிவு படுத்த முடியாது. கட்சி என்ற ரீதியில் ஒரு கட்சியுடனேயே கலந்துரையாடல் களை முன்னெடுக்க முடியும்.

தனிநபரை அடிப்படையாகக் கொண்டு நாங்கள் கலந்துரையாடல் களை முன்னெடுக்க முடியாது. தற் போது ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து பயணிக்கின்றோம் ஆனால் எதிர்காலத்தில் பயணிப்பது தொடர்பில் கட்சியுடன் கலந்துரையாடிய பின்னரே தீர்மானிக்க முடியும் என்றார். (ம-7)

## அதிபர்...

அதிபர் ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினைக்கு தீர்வினை பெற்றுத் தருமாறு வலியுறுத்தி ஆசிரியர் சங்கத் தினரால் நேற்று பாராளுமன்ற வளா கத்திற்கு முன்பாக பாரிய போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

பாராளுமன்ற வளாகத்திற்கு முன் பாக உள்ள பத்தரமுல்ல பொல்துவ சந்தியில் ஆசிரியர் சங்கங்களினால் பாரிய போராட்டமொன்று நேற்று முன் னெடுக்கப்பட்டது.

2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் ஆசிரியர்களுக் கான போதியளவு நிதி ஒதுக்கப்படாத காரணத்தினால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படுவதாக போராட்டத் தில் கலந்துகொண்ட ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த போராட்டம் காரணமாக பொல்துவ சந்தியில் இருந்து பாராளு மன்ற நுழைவு வீதியும் முற்றாக தடைப் பட்டிருந்தது. (ம-7)

## சிங்களம் மட்டும்...

தெரிவிக்கையில்,

"எமது நாட்டின் கல்வியானது, புரட்சிகரமான மாற்றத்தை நோக்கி பய ணிக்க வேண்டும்.

50களில் இருந்த சிங்களம் மட்டும் தான் என்ற கொள்கையுடன், எம்மால் நாடு என்ற ரீதியில் தற்போது முன் னோக்கி நகர முடியாது. எல்லைகளை வகுத்துக் கொண்டு பயணிக்கும் பய ணத்தினால் நாட்டுக்கு சௌபாக்கிய மான எதிர்காலம் கிடைக்காது.

சிங்களம் மற்றும் ஏனைய மொழி களுக்கும் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். விசேடமாக ஆங்கில மொழி மூலமான கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய காலகட்டத்தில் நாம் உள்ளோம் என்றார். (ம-7)

*(மற்றொரு செய்தி உள்ளே)*

## சுற்றுலா...

பாட்டு அதிகாரசபை இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

இந்த தகவலின்படி கடந்த நவம்பர் மாதத்தில் 151,496 சுற்றுலாப் பயணி கள் வருகை தந்துள்ளனர்.

கடந்த பதினொரு மாதங்களில் இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் மொத்த எண்ணிக்கை சுமார் பதின்மூன்று இலட்சம் என தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)

## அவருக்கு...

கடந்த மாதம் மாவீரர் தினமன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலை வர் பிரபாகரனின் புதல்வி பேசுவதாக வெளியான காணொளி தொடர் பில் கருத்துரைக் கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது குறித்து அவர் தெரிவித்த தாவது,

"தலைவர்பிரபா கரனின் மகள் துவாரகா பேசுவ தாக கடந்த நவம் பர் மாதம் 27ஆம் திகதி வெளியான வீடியோ போலி யானது.

அந்தப் போலி காணொளிக்கும் வெளிநாட்டு அரசுகளுக்கும் இடையில் தொடர்பு இருக் கும் என்று என் னால் கூற முடி யாது.

அதேவேளை, தொடர்பு இல்லை என்றும் என்னால் கூற முடியாது.

இதன் பின் னணியில் புலம் பெயர் தமிழர் களின் ஒரு குழு திட்டமிட்டுச்செயற் பட்டுள்ளது என் பது நூறு வீதம் உண்மை.

2019ஆம் ஆண்டு இடம் பெற்ற இறுதிப் போரில் தலைவர் பிரபாகரனும் அவ ரின் குடும்பத்தின ரும் உயிரிழந்து விட்டனர், அவர் களை வைத்து இனி எவரும் அர சியல் செய்ய முடி யாது. அது அவர் களை அவமானப் படுத்தும் செயல்."

தலைவர்பிரபா கரனின்கொள்கை களில் எனக்கு உடன்பாடில்லை. அவர் நேர்மையான ஒரு தலைவர், இறுதி வரை போராடிய ஒரு தலைவர்" எனக் கூறியுள்ளார். (ம-7)

## சா/த...

இதில்வாலை அம்மன் வீதி, அராலி கிழக்கைச் சேர்ந்த சிவகுமார் பானுப் பிரியா (வயது - 17) என்ற மாணவியே உயிரிழந்துள்ளார்.

அண்மையில் வெளியாகிய க.பொ.த சாதாரண தரப் பரீட்சை பெறுபேறு களின் அடிப்படையில் குறித்த மாணவி குறைவான பெறுபேற்றினை பெற்ற தாக தெரிவித்த பெற்றோர் குறித்த மாணவியை கண்டித்த நிலையில் அவர் தவறான முடிவெடுத்து தூக் கிட்டு உயிர்மாய்த்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசா ரணைகளை திடீர் மரணம் விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற் கொண்டார்.

உடற்கூற்று பரிசோதனைகளின் பின் னர் அவரது சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ம-7)


லக்கி 7 VIP
திகதி 2023.12.05
சீட்டிழுப்பு இலக்கம் 145
H 4 8 2 9 4 8 H

தன நிதானய
திகதி - 2023.12.05
சீட்டிழுப்பு இலக்கம் - 1349
F 05 44 69 71 F
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
Double Chance 30240

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3561
சீட்டிழுப்பு திகதி 05.12.2023
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
B 28 34 38 58
B 14905
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.12.05
சீட்டிழுப்பு இலக்கம் 0628
வெற்றி இலக்கங்கள்
கும்பம் 13 28 42 62 கும்பம்
42557 15

மஹஜன சம்பத
திகதி 2023/12/05
சீட்டிழுப்பு இலக்கம் 5319
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
G 2 2 5 3 6 3
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 05/12/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1667
வெற்றி எழுத்து சுப்பர் இலக்கம் வெற்றி இலக்கங்கள்
D 10 10 33 56 75
58241

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுப்பர் தன சம்பத
திகதி 05.12.2023 வெற்றி வாரம் 027 வர்ணம் சிவப்பு
T 1 0 5 5 1 6
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 23,091,691.20
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2293 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2023.12.05 தினம் செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள்
08 24 57 61 I
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 59,814,812/-

சனிதா
திகதி 2023.12.05 வெற்றி வாரம் 4454 வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள்
27 38 60 65 O
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 65,911,964.00
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
வெற்றி வாரம் 411
சீட்டிழுப்பு திகதி 2023.12.05
வெற்றி இலக்கங்கள்
04 07 47
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,692,120/-

ஜய
சீட்டிழுப்பு வாரம் 4005 வர்ணம் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.12.05 தினம் செவ்வாய்க்கிழமை
வெற்றி இலக்கங்கள் மகரம்
08 27 47 48
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,789,784/-

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
G 16 42 46 64 68
1469
2023.12.05 செவ்வாய்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 473,558,654.20
DLB தொலை பேசி: 011-2 333 546-47
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அட கோடிபதி ADA KOTIPATHI
செவ்வாய்க்கிழமை
வெற்றி வாரம்: 2119
வர்ணம்: கரும் நீலம்
சீட்டிழுப்புத் திகதி: 2023.12.05
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.73,917,672/-
வெற்றி இலக்கங்கள்
22 24 41 68 Q


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 43 மில்லியன் பெறுமதியான போதைப் பொருள் மீட்பு

(கொழும்பு)

தபால் மூலம் இலங்கைக்கு அனுப்பப்பட்ட போதைப்பொருள் தொகுதி ஒன்றை இலங்கை சுங்க போதைப்பொருள் கட்டுப்பாட்டு பிரிவின் அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர்.

கண்டுபிடிக்கப்பட்டுள்ள போதைப் பொருளின் பெறுமதி சுமார் 43 மில்லியன் ரூபாய் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மத்திய தபால் பரிவர்த்தனை நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது போதைப் பொருட்கள் இருப்பதாக சந்தேகிக்கப்படும் 25 பொதிகளை ஆய்வு செய்த போது இந்த போதைப்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

கொழும்பு, மஹரகம, பத்தரமுல்லை, பொரலஸ்கமுவ, பாணந்துறை, மொரட்டுவை மற்றும் கண்டி ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்களின் முகவரிகளுக்கு ஜேர்மனி மற்றும் இங்கிலாந்தில் இருந்து இந்த பொதிகள் அனுப்பப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணையில் அவை போலியான முகவரிகள் எனவும் தெரிய வந்துள்ளது.

மேலதிக விசாரணைகளின் பின்னர் இந்த போதைப்பொருள் கையிருப்பு பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்படவுள்ளது.

(ம-7)


சதாபொன்ஸ்
கல்வி நிலையம்
(ஒழுக்கம் சார் கல்வி)
மாலிசந்தி , அல்வாய்

A/L வர்த்தகப்பிரிவு
2025
புதிய பிரிவுகள்
ஆரம்பம் - 01 / 12 / 2023
கணக்கீடு - திரு . V.பகீரதன்
வணிகக்கல்வி - திரு . T.லோகேஸ்
பொருளியல் - திரு . V.ஜெகதீஸ்
(C-7814)
077 309 5176, 021 226 3206, 076 126 0105

காணி விற்பனைக்கு
கோப்பாய் இராசவீதி சந்திக்கு அண்மித்து உள்ள கிருஸ்ணன் கோவிலுக்கு மேற்கு புறமாக மானிப்பாய் வீதியிலிருந்து வடக்கே 20 மீற்றர் தூரத்தில் 3 பரப்பு காணி விற்பனைக்கு உள்ளது.
- நல்ல நீர் ஊற்று உள்ள கிணறு மற்றும் காய்க்கும் 7 தென்னை மரங்கள் உள்ள இடம்.
- வீடுகட்டுவதற்கும் விவசாயம் செய்வதற்கும் வியாபார நோக்கத்திற்கும் உகந்த இடம்.
(18077)
077 310 1357

எமது WEC நிறுவனத்தின் ஆட்சேர்ப்புக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன
தரம் 10. O/L, A/L படித்த 18 வயதிற்கும் 44 வயதிற்கும் இடைப்பட்ட அனைவரும் விண்ணப்பிக்க முடியும்.
புதிய கிளைகள் - யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களில் ஆரம்பிக்கவுள்ளது.
சம்பள அளவுத்திட்டம் - 29,500/= தொடக்கம் 45,000/= வரை
வெளிமாவட்டத்தில் இருந்து வருபவர்களுக்கு தங்குமிட வசதி ஒழுங்கு செய்து தரப்படும்.
(18117)
077 517 9034, 076 888 9384
பதிவிற்கு முந்துங்கள் - 077 985 8580

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (18088)
076 825 7716 (ஆகாஸ்)

சதாபொன்ஸ் கல்வி நிலையம்
(ஒழுக்கம் சார் கல்வி)
மாலிசந்தி , அல்வாய்
O/L மீட்டல் வகுப்புக்கள்
ஆரம்பம் - 07.12.2023
வியாழக்கிழமை
காலை - 8.00 மணி
(C-7814)
077 309 5176, 021 226 3206, 076 126 0105

தரம் - 10 (2024)
ENGLISH LITERATURE
by P.THARMAKUMARAN (P.Mathan)
BA(Eng.Lit), Dip.in.Eng, SLTES
(18118)
NEWTON GROUP CLASSES
No.18/18, Wyman Road, Nallur.
☎-077 792 3653

கார் வாடகைக்கு



Alto, Renault கார்கள் வாடகைக்கு உண்டு
சாரதியோடு / Self Drive ற்கு
(18121)
077 332 2433
யாழ்ப்பாணம்

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
(C-7804)
V2 TRAVELS
எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
☎ 0777-068-777
v2vacancies@gmail.com


CANADA
VISITOR VISA
VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்
CIMS COLLEGE (C-7804)
0777-068-777
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS

காணி விற்பனைக்கு
A9 வீதியில் நெடுங்குளம் சந்தியில் இருந்து கொழும்புத்துறை செல்லும் வீதியில் தண்டவாளத்திற்கு மேற்கே செல்லும் பாதையில் கோயிலுக்கு முன்பாக உள்ள 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு (C-7809)
077 948 4582

விற்பனைக்கு
கமுகங்கன்றுகள் விற்பனைக்கு உண்டு.
இடம் : தபால் கந்தோர் முன்பாக பாடசாலை வீதி, விசுவமடு.
(18110)
077 152 2637

வெளிநாடுகளுக்கான விரைவு பொதிகள் DHL
சகல நாடுகளுக்கான கடிதங்கள் 3-5 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
சகல நாடுகளுக்கான பொதிகள் 5-7 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
திருமுருகன் கொம்நெற்
321, K.K.S வீதி யாழ்ப்பாணம்.
0777 554 528 (18106)


## மரண அறிவித்தல்



### சிவப்பிரகாசம் கிருபானந்தன்
(வர்த்தகர் )

வேலணை மேற்கு முடிப்பிள்ளையார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் புளத்கொகுபிட்டியவை வசிப்பிடமாகவும் கொண்ட சிவப்பிரகாசம் கிருபானந்தன் ( வர்த்தகர் ) நேற்று முன்தினம் (04.12.2023) திங்கட்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சிவப்பிரகாசம் - விசாலாட்சி அம்மா தம்பதியரின் அன்பு மகனும் சோமாவதி (அதிபர் - யா/ நாரந்தனை றோ.க.பாடசாலை) அவர்களின் பாசமிகு கணவரும் லலிதாம்பிகை, வேதநாயகி, தையல்நாயகி அம்மா (விமலா), காலஞ்சென்றவர்களான பாலசூரியன், தற்பரானந்தன், கலைச்செல்வி ஆகியோரின் உடன் பிறந்த சகோதரனும் ஷயா, சரண்யா ஆகியோரின் ஆருயிர்த் தந்தையும் சத்தியனின் அன்பு மாமனாரும் கணபதிப்பிள்ளை, தவமணிதேவி, காலஞ்சென்ற ஸ்ரீபராபரன், குகவரதராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் யாழ்ப்பாணம் கந்தர்மடம் குமாரசுவாமி வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் இன்று (06.12.2023) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வேலணை அம்பலவி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 990 5565 (18114)


காணி விற்பனைக்கு
நல்லூர் கோவிலில் இருந்து 2Km தூரத்தில் 04 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
நிலப்பரப்பு
- பிரதான இராச பாதையும் G.P.S விளையாட்டரங்க வீதியும் இணையும் பிரதான சந்தி முகப்புடன் உள்ளது.
- 18 அடி பாதையுடன்.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் இரண்டு துண்டுகள் உள்ளது.
- திருமண மண்டபங்கள், அனைத்து விதமான வியாபார நிலையங்கள், வீடுகள் கட்டுவதற்கு உகந்த இடம்.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்று.
பார்வையிடும் நேரம் : காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை
(18093)
தொடர்புகளுக்கு : ஜெயம்
077 814 7389, 077 986 5457


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல. 9[illegible] [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org